1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 18-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு வைகாசிமாதம் 10-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

காரியம் இப்படி என்றால், நான் மனந்திரும்புவதைப்பற்றி அக்கறைகொள்ளத் தேவையில்லையெனது மரணப்படுக்கையில் நான் உத்தமமனஸ்தாபமுயற்சி செய்வதுபோதுமே. அடுத்தபடி இரட்சணியந்தானே என்று சிலர் சொல்லக்கூடும். மரணவேளையில் நீ மனந்திரும்புவாய் என உனக்கு நிச்சயப்படுத்திவிட்டதார்? மனந்திரும்ப உனக்கு நேரம்கிடைக்குமா? மனந்திரும்பும் விசேஷ வரப்பிரசாதம், உத்தமமனஸ்தாபம்செய்ய நல்லமனது அவ்வேளை உனக்குக்கிட்டுமா? நான் அறியேன்; நீயும் அறியாய். ஆனால், ஒருகாரியம் நிச்சயம். மரணவேளையில் மனந்திரும்புதல் பொதுவாக அருமை. ஒருவன் எப்படிச்சீவித்தானே அப்படிமரிப்பதே பொதுவிதி. ஆதலால் உனக்குச்சொல்லப்படும் மகாவிவேகம்உள்ள ஆலோசனையை ஏற்றுக்கொள். நீ சாவான பாவத்தோடிருந்தால் உத்தம மனஸ்தாபத்தைப் பின்போடாதே. இதைவாசிப்பதைத் தானும்நிறுத்திவிட்டுமுதன்முதல் உத்தமமனஸ்தாப முயற்சிசெய். அதன்பின் தொடர்ந்துவாசி.

4. நீ வரப்பிரசாத அந்தஸ்தில்இருந்தாலும் அடிக்கடி உத்தமமனஸ்தாப முயற்சியைப் புதுப்பித்துக்கொள். ஏன்? ஏனென்றால், உத்தமமனஸ்தாபம் இஷ்டப்பிரசாதத்தை அதிகரிக்கச்செய்கின்றது. இஷ்டப்பிரசாதத்தில் ஒருபடிஉயர்தல் உலகதிரவியங்கள் எல்லாவற்றிலும் கூடியதிரவியம். உனது பெறுபேறுகளைப்பெருக்கி உனதுமோட்சமகிமையையும் விருத்தியாக்கும்; அற்பபாவங்களுக்குப் பொறுதியடையும்; அநித்திய ஆக்கினையைக் குறைத்துவிடும் அல்லது நீக்கிவிடும். மரியமதலேனம்மாளுக்குப்போலவே நீயும்அதிகம் நேசித்தபடியால் உனக்கும் அதிகம் பொறுக்கப்படும். உத்தமமனஸ்தாபம் சகல புண்ணியங்களுக்கும்இராசாத்தியான தேவநேசத்தை வலிமைபெறச்செய்யும். கடைசிபரியந்தம் வரப்பிரசாதத்தில் நிலைபெறும்வரத்தைப் பெற்றுத்தரும். இதுதான்மோட்சத்துக்குத் தெரியப்பட்டவர்களின் விசேஷ சுதந்தரம்.

3. பிறர் உத்தமமனஸ்தாபமுயற்சி செய்வதற்கு நீ எப்போது துணை புரிவாய்?

குருவானவர் அருகில்இல்லாமல் ஒருவன் மரணத்தருவாயில் இருக்கும்பொழுது அவன் உத்தமமனஸ்தாப முயற்சிசெய்ய அவனுக்குஉதவிசெய்தல்வேண்டும். இப்படிப்பட்ட சமையங்களில் பொதுவாய்நடப்பதென்ன? அருகில்இருக்கும் இனசனர் எல்லாரும் ஆ, ஊ, ஐயோ! அந்தோ! என்று ஓலமிடுவார்கள். ஒப்பாரிசொல்வார்கள். ஒருபக்கம் குத்திமுறிந்து தடலதடல் என்று அடிப்பார்கள். மறுபக்கம்எல்லோரும் மதிகலங்கியவர்போல் நடக்கிறார்கள். வைத்தியனிடம் ஓடிப்போவார்கள். இதற்கிடையில் நோயாளன் மரணவஸ்தைப்பட்டுச் சிலேற்பனம் இழுக்கத் தொடங்கிவிடுவான். இந்தச்சத்தஞ் சந்தடிகள்மத்தியிலே மரணத்தருவாயில் இருப்பவனுக்கு நற்புத்தி கூறி அவனுக்கு **உத்தமமனஸ்தாபம் உண்டுபண்ணி** அதன்மூலமாக அவனைஇரட்சிக்கப் பிரயாசப்படுவார் எவருமேயில்லை.

நோயாளிக்கு அறிவுகெட்டுப் போனால், அல்லது அவனுக்கு ஒன்றும்கேட்கவில்லை, அவனுக்குஒன்றும் விளங்கவில்லை என்றபக்குவத்தில் என்ன செய்யவேண்டும்? அப்போதும் மெல்ல ஆத்திரப்படாமல் தெளிவாய் உரத்தசத்தமாய் உத்தம மனஸ்தாப மந்திரத்தைச் சொல்லு. ஏனென்றால் வெளித்தோற்றமெல்லாம் எப்போதும் உண்மையானதல்ல. சிலர்எண்ணுவதற்குமாறாக வெளித்தோற்றத்தளவில் மரித்தவர்கள்எனக் காணப்படுகிறவர்கள் உயிரோடும்அறிவோடும் நெடுநேரம் இருக்கிறார்கள்.

ஆனால், மரணத்தருவாயில் இருப்பவன் கத்தோலிக்கன் அல்லவென்றால் அதாவது அவன்பதிதனாய் அல்லது அஞ்ஞானியாய் இருந்தால் செய்வதென்ன? அப்போதும் அவர்கள் விளங்கக்கூடியவிதமாய் உத்தமமனஸ்தாபமந்திரத்தைச் சொல்லு. பாவசங்கீர்த்தனத்தைத்தானும் அவர்களுடன் பேசவேண்டியதில்லை. இப்படிச் செய்வதினால் நீ ஒரு ஆன்மாவை இரட்சிக்கலாம். நீ எப்பேறுபேறுள்ள ஒரு அலுவலைச் செய்து முடித்திருப்பாய். அது நித்திய சம்பாவனைக்குரிய ஒருதொண்டாக இருக்கும்.

(தொடரும்)

## கிரோஷிமா சமாதான நிலையம்

கிரோஷிமாவில் அணுக்குண்டு விழுந்தபொழுது உலகமே முடிந்துவிட்டது போன்றிருந்தது. ஒருவிநாடிக்குள் எல்லாம்முடிந்துவிட்டது. மனிதனைக்கலங்க வைக்கும் மின்வெட்டுப்போன்ற வெளிச்சம்; படார்........ 5,00,000 மனிதர் வசித்துவந்த கிரோஷிமா அற்பநேரத்தில் அடியோடு அழிந்துவிட்டது. மிகுதியாயிருந்ததென்ன? இருள், இரத்தக்கறை, வெந்தபுண், அழுகைக்குரல், தீப்பற்றிய வீடுகள் நடந்ததென்ன? யாருக்குத்தான் தெரியும்? இறந்துபோன 1,30,000 பேரும். எள்ளளவேனும் அக்கரை கொண்டிலர். உயிருடனிருந்தவர்களுக்கு நேரமில்லை. வெந்தபுண்களினாலும், காயங்களினாலும், பெலக்கேட்டினாலும் இன்னும் 70,000 சனங்கள் மாண்டார்கள். உயிருடனிருந்தவர்களுக்கு அதிகமாய்க் காயந்தான். தற்பெருமையில் இறுமாந்திருந்த நகரில் பயப்பிராந்தி தலைகாட்டியது. பத்துநாட்களுக்குப்பின் போர் ஓய்ந்தது. அன்று ஆவணி பதினைந்து; பரிசுத்த தேவதாயாரின் ஆரோபணத்திருநாள்.

கிரோஷிமாவில் இருந்த யேசுசபை அதிபர் வண. கியுகோ லசாலும் அவருடைய மூன்று உதவிக் குருமாரும் கடுங்காயமடைந்திருந்தார்கள். குண்டு வீசப்பட்டுப் பன்னிரண்டு மணித்தியாலங்களின் பின்னர் காப்பாற்றப்பட்டனர். அணுக்குண்டுத் தாக்குதலினால் அவர்கள் இரத்தம் குன்றிப்போயிற்று; காயங்கள் ஆற அநேகவாரங்கள்சென்றன. கிரோஷிமாவிலிருந்துமூன்று மைலுக்கப்பாலிருந்த யேசுசபைநவசந்நியாசஸ்தாபனத்தில் படிப்படியாய்க் குணமடைந்தார்கள். அந்தத் தாபனக்கட்டிடங்களுந் தாக்கப்பட்டிருந்தாலும் பாவிக்கக்கூடியதாய் இருந்தன. கடுங்காயப்பட்டோரும், சூடுபட்டோருமாக வீதிகளில் கிடந்த நூற்றுமுப்பது ஆட்கள் ஆறுமாத காலமாய் அங்கு தங்கினார்கள். சிலர் ஒருவருடத்திற்கு அதிகமாகவும் தங்க வேண்டியிருந்தது.

தம்மடத்தையும், அதிலுள்ள பொருட்கள் யாவற்றையும்இழந்துபோயிருந்த உத்தரிக்கிற ஆத்துமாக்களின் உதவியாளர் எனப்படும்கன்னியாஸ்திரிமாரே இந்தவியாதிஸ்தரைப் பராமரிப்பதில் குருமாருக்கு உதவியாயிருந்தார்கள். மருந்துவகைகள் மிகஅருந்தல்; உணவுக்கும் தட்டுப்பாடு அதிகம்.

அநேகமாதங்களின் பின்னர் அதிபர் சுவாமியும், ஒருஉதவிக் குருவானவரும் முன்கிரோஷிமாவாயிருந்த இடத்திற்குத் திரும்பினார்கள். தாங்களே தாங்களுக்கு ஒரு சிறுவிடுதியைப் பலகைகளினால் அமைத்துக்கொண்டனர். சிலநாட்களின் பின்னர் பனிமூடிக்கிடந்த கிரோஷிமாவில் வானக்கூரையின் கீழ் பூசையொப்புக்கொடுத்து, நத்தார் திருநாள் கொண்டாடினார்கள்.

பின் ஒருநாட்காலை ஒரு அபூர்வசம்பவம் நிகழ்ந்தது. மூன்று புத்தசந்நியாசிகள் குருமாரைச் சந்திக்க வந்தார்கள். தாம்கிரோஷிமாவுக்கு வந்தவிஷயத்தைப் பற்றியும், இறந்த 2,00,000 சனத்தைப்பற்றியும்சம்பாஷித்தார்கள். ஆயின் வந்தவர்கள் சீக்கிரம் கதையைமாற்றினார்கள். திருச்சபைச் சடங்காசார முறைகளைப் புகழ்ந்தார்கள். ஆச்சரியவசத்தரான சுவாமியாருக்கு, கிறகோறியன் சங்கீதம் தமக்கு எவ்வளவோ விருப்பமென்றார்கள்; சந்நியாசசீவியத்தைப்பற்றி விசாரித்துத் தியானம், செபம் முதலியவற்றைப் பற்றியும் ஆராய்வாக வினாவினர். கடைசியாய் அவர்களுடையதலைவன் "குருக்களும் விசுவாசிகளும் சமாதானத்திற்காக, எப்போதும் மன்றாடுகிறார்களா" என்று கேட்டான் "ஆம் கட்டாயம்" என்றார் கியுகோ லசால் சுவாமியார்.

அதாவது சுவாமி நாங்கள் ஒரு புதுத்திறமான கிரோஷிமாவை நிர்மாணிப்போம். ஆனால் எல்லாவற்றிலும்மேலாக மனிதருடைய மனங்கள் திருந்தவேண்டும். இங்கு நடந்தவைகளைப்பற்றி ஒருவரையும் குறைகூறுவதற்கில்லை. யப்பானியரான நாங்களே இந்த யுத்தத்தைக் தொடங்கினேம். தற்கால யுத்தத்தின் விளைவுகளை கிரோஷிமாவிலிருக்கிற நாங்களே கண்

( தொடர்ச்சி 8-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CATHOLIC TERMS & PRAYERS

The late Fr. S. Gnana Prakasar of Nallur prepared a list of new Catholic Terms in Tamil and a new Tamil version of the Our Father, the Hail Mary, and the Apostles' Creed, for submission to the Bishops of the Tamil Dioceses in India and Ceylon. Since he died before doing so, and since new versions of these prayers are being prepared in some Indian Dioceses, we are publishing his Terms and Version here for general information. For the sake of comparison we are putting by the side of his version the version of the Bishops' Conference at Mysore in March 1951. In both versions the portions that differ from the Jaffna Catechism version are in thick types.

| | | |
|---|---|---|
| Holy Ghost | ... | பரிசுத்த ஆவி |
| Grace | ... | பிரசாதம் |
| Actual grace | ... | செயற்பிரசாதம |
| Habitual grace | ... | நிலைப்பிரசாதம் |
| Justifying grace | ... | நீதிமானுக்கும்பிரசாதம் |
| Sanctifying grace | ... | பரிசுத்தமாக்கும்பிரசாதம் |
| Sacramental grace | ... | திவ்விய அனுமானப்பிரசாதம் |
| Sacrament | ... | திவ்விய அனுமானம் |
| Sacramental | ... | திவ்விய அநுமானீயம் |
| Infused virtue | ... | பதித்த புண்ணியம் |
| Gifts | ... | கொடைகள் (வரங்கள்) |
| Fruits | ... | கனிகள் |
| Merit (for heaven) | ... | பெறுபேறு |
| Deprecatory merit | ... | வேண்டுதற்பேறு |
| Propitiatory (forgiving) merit | ... | மன்னிப்புப்பேறு |
| Satisfactory merit | ... | உத்தரிப்புப்பேறு |
| Indulgence | ... | தபசிளக்காரம் |
| Partial indulgence | ... | பாகத் தபசிளக்காரம |
| Plenary indulgence | ... | முழுத் தபசிளக்காரம் |
| Ascension | ... | ஆரோகணம் |
| Assumption | ... | ஆரோபணம |

## Our Father

### Fr. S. G. P.

பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே!

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக!

உம்முடைய இராச்சியம் **வருவதாக**!

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல ப்பூமியிலேயும் செய்யப்படுதாக.

எங்கள் **அநுதின போசனத்தை** எங்களுக்கு இன்று தாரும்.

எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுப்பது போல, எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்.

எங்களைச் சோதனையிலே உட்படவிடாதேயும்.

தின்மையிலே நின்று எங்களை **இரட்சியும்**. ஆமென்.

### Mysore

**பரலோகத்தில்** இருக்கிற எங்கள் பிதாவே!

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக!

உம்முடைய இராச்சியம்வருக!

**உம்முடையசித்தம்** **பரலோகத்தில்** செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்கள் **அநுதின உணவை** எங்களுக்கு இன்று **அளித்தருளும்**.

எங்களுக்கு **தின்மை செய்தவர்களை** நாங்கள் **மன்னிப்பது** போல **எங்கள் பாவங்களை மன்னித்தருளும்**.

எங்களைச் சோதனையில் **விழ** விடாதேயும்.

தின்மையில் நின்று எங்களை **இரட்சித்தருளும்**. ஆமென்.

## Hail Mary

### Fr. S. G. P.

**மங்களம்** மரியாயே, **பிரசாத பூரணியே**! கர்த்தர் உம்முடனே.

ஸ்திரீகளுக்குள்ளே **ஆசி நிறைந்தவர்** நீரே!

உம்முடைய **திருவயிற்றின் கனியாகிய** யேசுவும் **ஆசி நிறைந்தவரே**!

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சருவேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

### Mysore

**தேவஇஷ்டப் பிரசாதத்தினுல்நிறைந்த** மரியாயே, வாழ்க! கர்த்தர் உம்முடனே.

ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே!

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே;

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும், எங்கள மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்.

## Apostle's Creed

### Fr. S. G. P.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சருவத்துக்கும்வல்ல பிதாவாகிய சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

அவருடைய ஏகசுதனுகிய நம்முடையநாதர் யேசுக்கிறீஸ்துவை யும் விசுவசிக்கிறேன்.

இவர் பரிசுத்த ஆவியினுலே கர்ப்புமாய் உற்பவித்து, அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாய் இடத்தில் நின்று பிறந்து, போஞ்சியு பிலாத்துவின் கீழ்ப் பாடுபட்டு, சிலுவையிலே அறையுண்டு, மரித்து, அடக்கப்பட்டு,

பாதாளங்களிலே இறங்கி, மூன்ரும்நாள் மரித்தவர்களிடையில் நின்று உயிர்த்தெழுந்தருளினர்.

பரமண்டலங்களில்ஏறி, சருவத்துகரும்வல்ல பிதாவாகிய சருவேசுரனுடைய வலதுபாரிசத்தில் **வீற்றிருக்கிரூர்**.

அவ்விடத்தில் நின்று சீவியர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நடுத்தீர்க்க வருவார்.

**பரிசுத்த ஆவியையும்** விசுவசிக்கிறேன்.

**பரிசுத்த கத்தோலிக்கு திருச்சபை** யையும், அர்ச்சியசிஷ்டர்களுடைய ஐக்கியப் பிரயோசனத்தையும் பாவப்பொறுத்தலையும்,

மாமிசஉத்தானத்தையும் நித்தியசீவியத்தையும் விசுவசிக்கிறேன். ஆமென்.

### Mysore

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும் வல்லபிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன்.

அவருடைய ஏகசுதனுகிய நம்முடையநாதர் யேசுக்கிறீஸ்துவையும் விசுவசிக்கிறேன்.

இவர் இஸ்பிரீத்துசாந்துவினுல் கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சியசிஷ்ட கன்னிமரியாயிடத்தில் நின்று பிறந்து போஞ்சு பிலாத்தின் **அதிகாரத்தில்** பாடுபட்டு; சிலுவையில் அறையுண்டு மரித்தடக்கப்பட்டார.

பாதாளங்களில் இறங்கி மூன்ரும்நாள் மரித்தவர்களிடத்தில் நின்று உயிர்த்தெழுந்தார்.

**பரலோகத்தில்**ஏறி, சர்வத்துக்கும்வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிரூர்.

அவ்விடத்தில் நின்று சீவியர்**களையும்** மரித்தவர்**களையும்** நடுத்தீர்க்க வருவார்.

இஸ்பிரீத்துசாந்துவை விசுவசிக்கிறேன்.

பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்டசபையை **விசுவசிக்கிறேன்.** அர்ச்சியசிஷ்டர்களுடைய **சமூதீத்**ப் பிரயோசன**த்தை விசுவசிக்கிறேன்.** பாவப்பொறுத்**தலை விசுவசிக்கிறேன்.**

**சரீர**உத்தானத்தை **விசுவசிக்கிறேன்.** நித்தியசீவியத்தை விசுவசிக்கிறேன். ஆமென்.

---

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள்

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 14: 23—31)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: ஒருவன் என்னைச் சிநேகித்தால் என்வாக்கியத்தை அநுசரிப்பான். என் பிதாவும் அவனைச்சிநேகிப்பார். அன்றியும் அவனிடத்தில் வருவோம, அவனுக்குள் வாசம் செய்வோம். என்னைச்சிநேகியாதவன் என்வாக்கியங்களை அநுசரியான். மேலும் நீங்கள் கேட்டவாக்கியம் என்னுடையதல்ல; என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கின்றது. நான் உங்களோடு வாசம்செய்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். ஆனல், பிதா என்நாமத்தினல் அனுப்பும் தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் தாமே உங்களுக்குச் சகலத்தையும் படிப்பிப்பார். நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் அவர் உங்களுக்கு ஞாபகப்படுத்துவார். சமாதானத்தை உங்களுக்குவிட்டுப்போகிறேன். நான் என்சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆனல், நான் உங்களுக்குக் கொடுப்பதோ உலகங்கொடுப்பதுபோலல்ல. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கக்கடவது. நான் போய், உங்களிடத்தில் மறுபடி வருகிறேன் என்று உங்களுக்கு நான் சொன்னதைக் கேட்டீர்களே; நீங்கள் என்னைச்சிநேகிப்பீர்களேயாகில் பிதாவினிடத்திற் போகிறேன் என்றதினல் மெய்யாகவே சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில், பிதா என் [illegible] பெரியவராயிருக் [illegible] இது சம்பவிக்கும்போது நீங்கள் விசுவசிக்கும்படி இதுசம்பவிக்கிறதற்கு முன்பே இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களோடு அநேககாரியங்களைப் பேசேன்; ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதிவருகிறன். அவனுக்கு என்பேரில் எவ்வளவேனும் அதிகாரமில்லை. ஆயினும், நான் பிதாவைச் சிநேகிக்கிறேனென்று உலகம் அறியும் பொருட்டுப் பிதா எனக்கு எப்படிக்கட்டளையிட்டாரோ அப்படியே செய்கிறேன் என்றூர்.

கிறீஸ்துவே, உமக்குப்புகழ் உண்டாவதாக.

---

## போர்த்துக்காலின் பிரசாதிபதி

போர்த்துக்கால்தேச பிரசாதிபதியாகக் கடந்த 25 வருடகாலமாகப் பதவிவகித்திருந்தவரான மாஷல் அன்ரோனியோ கார்மோனுஅவர்கள் தமது 81-ம்வயசிலே சென்றமாசம் 18-ந்திகதி புதன்கிழமை காலஞ்செல்லலாயினர். இவர் 1926-ம ஆண்டு போர்த்துக்காலில் நிகழ்ந்த இரத்தப்பிரவாகமற்ற அரசியற்புரட்சியின்போது அதிகாரத்தைக் கைப்பற்றி அதுமுதல் அத்தேச பிரசாதிபதியாய் இருந்துவந்தார். கீர்த்தி வாய்ந்த போர்வீரர்களை உதவிய ஓர் புராதன பிரபுகுடும்பத்தில் உதித்த இவர் அதேநாமத்தைக்கொண்ட நான்காவது ஜெனறலாவர். இவர்முந்தப பிரதமராயும், யுத்தமந்திரியாயும் நியமனம்பெற்று இருவருடங்களின்பின்னரே பிரசாதிபதியாயினர். இவர் ஏழுவருடத்துக்கு ஒருமுறையாய் எல்லாமாக நான்குமுறை பிரசாதிபதியாகத் தெரியப்பட்டிருக்கின்றூர்.

---

## நன்றி

பரிசுத்த பாத்திமாராணியும், அர்ச். திரேசம்மாள், மேரி சொறெற்றி அம்மாளும் பேரிரக்கம்கொண்டு என்தம்பிக்கு கிளறிக்கலில் நற்சித்தியளித்ததற்காக நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

இளவாலை ச. அ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கத்தோலிக்க
## நானு சங்கதிகள்

— யூகோசிலேவியாவின் கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரைப்பற்றிக் குற்றங்கூறிப் பத்திரிகைஒன்றில் எழுதியுள்ள ஒருவருக்கு மறுப்பாக அங்கிளிக்கன் சபைப் பாதிரியார்ஒருவரின் மனைவியார் பின்வருமாறு எழுதியுள்ளார்: "கருதினல்ஆண்டவர் தம்மை வருத்தியசத்துராதிகள்மட்டிற்காட்டிய ஓர்மமும், அஞ்சாநெஞ்சமும் ரோமான் கத்தோலிக்கசபையை மாத்திரமல்ல, கிறீஸ்துவ உலகம்முழுவதையும் பெரிய மகிமைக்குட்படுத்தியது. கருதினலைப்பற்றிக் குறைகூறிஎழுதியவர் இருமுழங்காவிட்டு, தமது உத்தம சீஷனுக்குப் பெரும் அருளை அளித்து அவரின் கிறீஸ்துவவீரத்துவத்தை உலகத்துக்குக் காட்டிய சருவேசுரனுக்கு நன்றிகூறல்வேண்டும். இன்னும் கருதினலுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கின் சரிதை முழுவதையும் வாசித்தபொழுது என்மனம் தயங்கிப் பயத்தினுல் நிரம்பியது. என் ஞாபகத்தில் அவரின்சரிதை நன்ருகப் பதிந்திருக்கின்றது. சர்வேசுரனுக்காக எவ்வளவோ ஆக்கினைகளை அனுபவித்த இப்பெரிய மகானை என்றும் போற்றித் துதிப்பேன்."

— பலஸ்தீன தேசத்திலுள்ள ஓர் இடத்தின் மேற்றிராணியாரென்று போலிவேடம்பூண்டு, சுவிற்சர்லாந்திலும் பிரான்சிலும் அதிக பணம்சேர்த்த ஓர் பெல்ஜிய தேசத்தவனுக்கு ஆறு மாதமறியல் தீர்ந்திருக்கின்றது. இவன் முதன்முதல் சுவிற்சர்லாந்திலிருக்கும் குருமாரைஏமாற்றிப் பணம் சேர்த்தான். இவனது போலிவேடத்தைக்கண்டுபிடித்தபொழுது, இவன் சுவிற்சர்லாந்தின் எல்லையைக் கடந்து பிரான்சு தேசத்துக்குட் சென்று பெல்லே மேற்றிராசனத்தில் பணம் சேர்த்தான். பெல்லே மேற்றிராணியார் இவனது போலிவேடத்தை அறிந்ததும், அவன் அரசினரால் கைதுசெய்யப்பட்டான். பிரான்சில் ஆறுமாத மறியற்சேவை செய்து முடிந்ததும், அவன் பெல்ஜியநாட்டுஅரசாங்கத்தின் வசம் ஒப்படைக்கப்படுவான். திருச்சடங்கை இவன் நன்கு அறியாதிருந்த காரணத்தினுற்தான் இவனது போலிவேடத்தை மற்றவர்கள் கண்டுபிடித்தனர்.

— சீனுவில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பெற்ருரால் கைவிடப்பட்டுக் கிடக்கின்றன. இவைகளுக்காக அமெரிக்க மிஷனரிமார் அநேகம் அனுதசாலைகளைத் திறந்திருக்கின்றனர். இத்தகையகுழந்தைகள் அதிகமாக மரணமடைகிறதினுல் அரசாங்க வைத்தியசாலைகளில் அதிகம் அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில் இவைகள் அதிகநேரத்திற்கு வெளியில் குளிருக்குள்கிடப்பதினுல் என்க. இத்தகைய குழந்தைகளுக்காக லோட்டிங் என்ற நகரில் ஓர் அனுதசாலையை வண. ஷெருபேட் ஹெனெல்லி சுவாமியார் ஏற்படுத்தி நடத்திவந்தார். ஆனுல் அவரை இப்பொழுது கம்யூனிஸ்த அரசாங்கம் கைதுசெய்து சிறையில் வைத்திருக்கின்றது.

— ஹங்கேரியிலுள்ள கையர்நகரின் மேற்றிராணியாரான மகாவந். அப்போர் ஆண்டவரின் ஆரும் மரணதினத்தன்று அவருக்கு முத்திப்பேறுபட்டம் கொடுக்குமாறு வத்திக்கானுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது. 1945-ம்ஆண்டில் கையர்நகரை ருஷிய போர்வீரர் அடைந்தபொழுது, அநேக பெண்கள் அக்கொடியவர்களின் கையிலிருந்து தப்புமாறு மேற்றிராணியாரதுமாளிகையில் அடைக்கலம் புகுந்தனர். போர்வீரர் அம்மாளிகையை அணமியதும் மேற்றிராணியார் மாளிகைவாசலில் நின்றுகொண்டு, அவர்களைத் தடைசெய்தனர். அவர்கள் மேற்றிராணியாரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

### கண்ணீர்விட் டழுவது
### தேகநலனுக்கு உகந்ததா?

சிரிப்பது தேகசௌக்கியத்திற்குப் பிரயோசனமானது என்று டக்றர்மார் கூறுகிருர்கள். சமயா சமயங்களில் அழுவதும் தேகசவுக்கியத்திற்குப் பிரயோசனமானது, அவசியமுங்கூட என்று இப்பொழுது தெரியவருகிறது. இதுபற்றி ஒரு பிராஞ்சுபத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையின் சாரமே பின்வருவது:

கண்ணீர்ச்சுரப்பிகள் குழந்தைபிறந்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகு தங்கள் வேலையைச்செய்யத் தொடங்குகின்றன. அதனுல்தான் இரண்டு மாதத்திற்குட்பட்ட சிசுக்கள் அழுகையில் கண்ணில் நீர் சுரப்பதில்லை. ஆடவர்களைவிட பெண்களே அதிகமாகக் கண்ணீர் விட்டழுகின்றனர். இதற்குக் காரணம் ஆண்களைவிடப் பெண்களுக்கு உணர்ச்சி வேகம் அதிகம். மேலும் பையன்கள் அழுவதுபொருந்தாது என்று பள்ளித்தோழர்களும், தாய் தந்தையர்களும் உபாத்திமார்களும் போதித்து வருவதால் பையன்கள் கண்ணீரையடக்கப் பழகிக்கொள்ளுகின்றனர். வயது ஏற ஏற ஆடவன் தனது உள்ளாந்தர உணர்ச்சிகளைப் பிறர் அறிந்துகொள்ளாவண்ணம் அடக்கப் பழகிக்கொள்ளுகிருன்.

இவ்வாறு கண்ணீர்ச்சுரப்பைத்தடுப்பது உடம்புக்கு நன்மைபயக்குமா? தீமைபயக்குமா? தீமையே பயப்பதாக வைத்தியசாஸ்திரிகளும் மானஸசாஸ்திரிகளும் கருதுகின்றனர். கண்ணீரில் லிஸோஸிம் என்ற கிருமிகள் இருக்கின்றனவாம். இந்த லிஸோஸிம் என்ற கிருமிகள் இருப்பதைக் கண்டுபிடித்தவர் பெனிஸிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தவராகிய சேர் அலெக்சாண்டர் ப்ளெமிங் என்பவரே. இந்த லிஸோஸிம் கிருமிகளுக்கு இதரபல கிருமிகளைக் கொல்லும் சக்தியுண்டாம். ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கும் கிருமிகள் கண்களில் படியக்கூடும என்பதாலும், இவற்றுள் மனிதனுக்குத் தீங்குவிளைக்கக்கூடிய கிருமிகள் சில இருக்கக்கூடும் என்பதாலும் அக்கிருமிகளைக் கொல்லக்கூடிய லிஸோஸிம் கிருமிகள் கண்களிலிருந்து வழிந்தோடுவது நன்மை பயப்பதேயாகும் என்று சில டக்றர்மார் கருதுகின்றனர்.

மற்றொரு பக்கத்தில், கண்ணீர் சுரக்கவிடாமல் தடுப்பதால் மனிதனுக்கு வேறுவிதத்தில் தீமையேற்படுமாவென்பதைப்பற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இரைப்பையில் புண் ஏற்பட்டு உபாதைப்படுபவர்களின் இரைப்பைகளில் ஏராளமாக லிஸோஸிம்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனிதனுடைய உள்ளத்தில் பலமான உணர்ச்சியேற்படும்போதெல்லாம் அதிக அளவில் லிஸோஸிம்கள் உற்பத்தியாகின்றன. இவைகள் கண்களின் வழியேவழிந்து வெளியே போகவிடாமல் தடுத்தால் உடலுக்குள்ளேயே சஞ்சரிக்க வேண்டியதாயிருக்கிறது. இவைகள் இரைப்பையின் உட்பாகத்திலுள்ள மிகநுட்பமான சருமத்தில் புண்ணையுண்டாக்கக்கூடும் என்று சில டக்றர்மார் கருதுகின்றனர். இவர்கள் இவ்லாறு கருதுவதற்குப் பலத்த ஆதாரமாக இருப்பது என்னவெனில் இரைப்பையில் புண் ஏற்பட்டு உபாதைப்படுபவர்களில் பெண்களைவிட ஆண்கள் நான்கு பங்கு அதிகமானபேர்கள் இருக்கிருர்களாம். பெண்களைவிட ஆண்கள் குறைவாக கண்ணீர் சிந்துவதே இதற்குக் காரணமா? டக்றர்மார் இதைப்பற்றி அழுத்தந்திருத்தமாக இன்னும் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அவர்கள் முடிவான [illegible] வரையில் [illegible] கிடைக்கையில்சிரிப்பதையும், அழச்சந்தர்ப்பம் நேரிடுகையில் அழுவதையும் [illegible] வேண்டுமென்செய்யக்கிடக்கின்றது!

— சர்வவியாபி

# இன்னுமொருமுறை காண்பேனே?

1. அன்னை தமிழ்விழாக் கண்டேனெடா! உயர்
 ஆனந்தத் தேனமு துண்டேனெடா!
இன்னுமொருமுறை காண்பேனேடா! எங்கள்
 ஈழமணித் திருநாட்டி லெடா!

2. சந்தப் பொதியையும் வந்ததெடா! அதைச்
 சார்ந்த அகத்தியன் சேர்ந்தானெடா!
சிந்தைக் களைப்பெலாந் தீர்த்திடவே யந்தத்
 தென்றலும் வந்து திரிந்ததெடா!

3. சேரரைச் சோழரைக் கண்டேனெடா! அந்தத்
 தென்னவர் தீந்தமிழ் உண்டேனடா!
பாருவக்கும் வஞ்சி காஞ்சியோடு வுயர்
 பண்டை மதுரையுங் கண்டேனெடா!

4. கண்ணுன வையைநீ ராடிநின்ருர் அந்தக்
 காவேரிப் பொன்மலர் சூடிநின்ருர்
பண்ணுன பண்ணெலாம் பாடிநின்ருர் இந்தப்
 பாக்கியத்தால் மகிழ் கூடிநின்ருர்.

5. துங்கநக் கீரன் கபிலனேடு புகழ்
 தோன்றும் பரணரும் வந்தாரெடா!
சங்கப் பலகையுங் கண்டேனெடா அதைச்
 சார்ந்த புலவருஞ் சேர்ந்தாரெடா.

6. தெய்வப் புலவனுந் தேடிவந்தான் கவித்
 தேனருள் கம்பனும் ஓடிவந்தான்
வையந் தமிழ்மய மானதெடா! உயர்
 வானும் வெறுமையாய்ப் போனதெடா!

7. தாங்குந் தலைமைக் கென்றேயுயர் தண்டமிழ்த்
 தாயா ரளித்தருள் சேதுப்பிள்ளை
ஓங்குங் குருதனி நாயகம் மற்றுமிங்
 கொப்பாரு மில்லாத விற்பனர்கள்

8. சங்கத் தமிழினின் சாற்றைத் தந்தார்; நலன்
 தங்குந் திருக்குறள் ஊற்றைத்தந்தார்;
துங்கச் சிலம்பதின் தூய்மைதந்தார்; பின்னுஞ்
 சொல்லிச் சொல்லிப்பல வாய்மைதந்தார்.

9. பேச்சி லமுதம் பிறந்ததெடா! ஒரு
 பேச்சினில் வானந்திறந்ததெடா!
பேச்சினில் கங்கை பெருகிற்றெடா! ஒரு
 பேச்சினில் மேருமுருகிற்றெடா!

10. கண்ணும் மனமுங் களித்திடவே யிந்தக்
 காட்சியைத் தந்தநங் கற்றவர்க்கு
மண்ணும் விண்ணும் புகழோங்குகவே! மன
 வாக்கொடு போற்றுதும் வாழுகவே!

"ஞானி"

## பிரலாப மரணம்

வதிரி—கரவெட்டியிலும், பொதுவாக வடமராட்சிக் கத்தோலிக்கர் மத்தியிலும் சிறப்பாக ஒளிசெய்துகொண்டிருந்த ஒருநட்சத்திரம் மங்கிவிட்டது. தேவசந்நிதானத்தை இடைவிடாது சிந்தித்துக்கொண்டிருந்த ஒரு தீங்கனி தெய்வலோகம் நோக்கிப் பறந்துவிட்டது. வதிரி—கரவெட்டி கண்ணீர்வடிக்க, இனசனர் உள்ளங்கலங்கி உரைதடுமாற நாம் திரு. S. ஞானப்பிரகாசம் என்னும் சமூக ஊழியனை இழந்துவிட்டோம்.

திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் நம்மைவிட்டுப் பிரியும்போது அவருக்குவயது 52. கடந்த 31 வருடகாலமாகப்பிரசித்தவேலைப்பகுதியாரின் (P.W.D.) உதவி நிதிப்பரிசோதகராக இவர் கடமையாற்றி வரும்போது இருதயக் கோளாறுகாரணமாகச் சென்றமாசம் 24-ந்திகதி இரவு இப்பரிதாபமரணம் சம்பவிக்கலாயிற்று.

இலங்கைக் கத்தோலிக்கசங்க நிர்வாகஊழியரில் இவரும் ஒருவர். கடமையையும் தேவவழிபாட்டையும் சமூகத்தொண்டையுமே தனது அரும்கண்மணிகளாய்ப் போற்றிவந்தார். இவருடைய ஆங்கிலப்புலமையைப் பாராட்டாதவர்களே கிடையாது. இவருடைய பேச்சுக்கலை தனிச்சிறப்புவாய்ந்தது.

திரு.ஞானப்பிரகாசம்அவர்கள், வண. S. G. ஹில்லறிச் சுவாமியார் அவர்களின் ஒரேஒரு மருகர். இவருடைய ஒரு சகோதரி நீர்கொழும்புமடத்தில் ஓர் கன்னிகாஸ்திரியாகி ஆசிரியைத் தொழில்ஆற்றுகின்ருர். திருவாளர்கள்: S. B. தேவசகாயம், S. B. சாமிநாதர், N. பிலிப் செல்லையா என்பவர்கள்இவருடைய மைத்துனர்களாவர்.

கொழும்பு P. W. D. உத்தியோகஸ்தர்கள் ½ மைல் தூரம் நடந்து சென்று அவருடைய சேவைகளைப் பாராட்டிப்பேசினர். மறுநாள் பிரேதம் வதிரிக்குக் கொண்டுவரப்பட்டு வதிரி—கரவெட்டியிலிருந்துகுவிந்த நூற்றுக்கணக்கான மக்கள் துயரோடுமுன்செல்ல, வண. S. G. ஹில்லறி O. M. I. சுவாமியார் துக்கசங்கீதம்பாடிப் பின்செல்லச் சேமக்காலையடைந்து அங்கு பூமிதானம் செய்யப்படலாயிற்று. இவரை இழந்து துயருறுவாரனைவரோடு நாமும் அனுதாபப்பட்டு இவருடைய ஆத்மசாந்திக்காக மன்ருடுகிறேம்.

நீ. அகஸ்தீன்

**R. I. P.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

வைகாசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 11 | இரக்கத்தின்மாதா திரு. | (வெ) |
| சனி | 12 | அர்ச். நெரேயார் | (சி) |
| ஞா | 13 | இஸ்பிரீத்து சாந்துவின் ஆகமனத்திருநாள் | (சி) |
| திங் | 14 | அர்ச். பொனிப்பாசியார் | (சி) |
| செ | 15 | அர்ச். டெலாசால்ஸ் அருளப்பர் | (சி) |
| புத | 16 | அர்ச். உபால்தப்பர் | (சி) |
| வியா | 17 | அர்ச். பஸ்கால் பயிலோன் | (சி) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
வைகாசிமாதம் 10-ந் திகதி

## "தாயாக நீர்இரும்"

ஞானநெறியில் நடப்பவர்க்கு மோட்சத்தில்நினைவு; நல்லறிவுளோர்க்கு நாடொறுந் தருமத்தில் நினைவு. அஃதேபோல் மக்களாய்ப்பிறந்த ஒவ்வொருவர்மனத்திலும் ஒவ்வோர்தனிப் பெரும்நினைவு தவரு திருத்தல் வேண்டும். அதுவே தேவபக்தி. மானிடவாழ்க்கையைத் தேனென மிளிரச்செய்வது அது. உண்மைநெறியை ஊட்டுவது அது. மனத்தை மலரச்செய்வது அது. மன்பதைகளின் துன்பத்தை இன்பமாக மாற்றவல்லது அது. சுருங்கச்சொல்லின் பக்தியற்ற வாழ்க்கை சக்தியற்றது; சித்தியற்றது.

இறைவன்பக்தியை எய்துவதற்கு இணையற்ற வழிகாட்டியாய் இருப்பது மாதாவின் மாண்புறுபக்தி. மாதாவில் நினைவில்லாமக்களும் உளரோ? நரக திக்கில் நம்மைநடத்தாமல் பரகதிக்கு ஆளாக்கவல்ல பரமனின்தாய் நமக்குந் தாய்அன்றோ?

பிறந்தபொன்னடும், சிறந்த எந்நாடும் பெற்றதாய்க்கு ஈடாகா. மண்கொண்டபூமியில் கண்கண்டதெய்வம் அவரன்றோ? பத்துமாதஞ்சுமந்து பரிவுடன் பெற்றெடுத்தநற்றாயை—உச்சிமோந்து—பிச்சிசூடி—உள்ளங்குளிரவைத்த நற்றாயை—தாலாட்டித் தலைமேல்வைத்த நற்றாயை—அறுசுவை யுணவுங் குறைவறத்தந்த நற்றாயை—தன்பிள்ளை நோயடையத்தானே மருந்துண்ணுந் தவப்பேறுன நற்றாயை எவ்வளவு அருமைபெருமையாய்ப் போற்றுகின்றோம். புகழுகின்றோம். ஏனெனில்தாய்மையில் தன்னலங்கருதாமை, தியாகம், பொறுமைமுதலிய நற்பண்புகள் இயற்கையிலே சால அமைந்துள்ளன. இக்குணங்களினலேயே உலகம் இயங்கி நடைபெறுகின்றது. கணக்கற்ற கல்விநூல்களினலும், கற்றறிந்த ஞானிகளாலும் கணிக்கப்படுவது சீரியகுணநலம் நிரம்பிய தாய்மையே. ஒவ்வோர் ஆன்மாவும் இக்குணங்களைப் பெற்றாலொழிய இறைவனருளையடைய என்றும் முடியாதென்பது துணிபு. தாய்மையின் தனிப்பெருந்தன்மையை யுன்னியே ஆண்டவனை "அம்மையே" என்றும் அழைக்கின்றனர். "தாதாய்! நீயே உலகுக்கெல்லாந் தாய்" என்றும், பிறந்தநாட்டைத் தாய்நாடு என்றும் பேசும் மொழியைத் தாய்மொழிஎன்றும், பேதுருஎன்னும் கல்லின் மேல்கட்டிய கத்தோலிக்கதிருச்சபையை "பரிசுத்தமாதாவாகிய திருச்சபை" என்றும் அழைக்கின்றனர். தாய்மையிலே இத்துணைச் சிறப்பென்றால், வல்லபிதாவின் நல்லகுமாரத்தியும் தேவசுதனின் திவ்வியதாயும், இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனின் இணையிலாப் பிரியமுள்ள வளுமாயிருந்து திரித்துவத்தின் அருளெலாம் ஒருசேரப் பெற்றுத்தரும் பாக்கியம் பொருந்திய தேவதாயாரின் திவ்வியமகிமையைத் தெருட்டவல்லவர் யார்?

மாதாவின்பக்தியே பேரின்பத்துக்கு ஏற்றிச்செலலும் பெரியஏணி; மக்கள்மனத்தை யிழுக்கும் மாண்புறுகாந்தம்; அள்ள அள்ளச் சுரக்கும் அருமையானஊற்று.

மூவுலகும்போற்றும்முழுமுதற் கடவுள் மாதாவின்மூலம் மண்ணிற்பிறந்தார். மாதாவைநமக்குத் தாயாகத்தந்தே மன்னுயிர் துறந்தார். எனவே மாதாவின் மூலமே நாமும் இரட்சணியத்தை அடையவேண்டுமென்பது அவரது திருச்சித்தம் என்பதுந் தெளிவாகின்றது.

சந்ததிக்காய் என்னைப்பெற்ற தாய், தனக்குத் தாய்நாடிச் செல்கின்றாள். உலகமேதாயைத் தாயைநாடிச்செல்லுந் தன்மை பொருந்தியது:

> "எனக்குத் தாயாகியாள்
> என்னையீங்கிருத்தித்
> தனக்குத்தாய் நாடியே
> சென்றாள்"

என்பது அறிஞர்வாக்கு. ஆயினும் எல்லாத்தாய்மாரும் என்றும்நாடிச் செல்லும் ஏகதாய் தேவதாயேயன்றோ!

தாயே! தயாபரியே! எமக்குத் "தாயாக நீர்இரும்" என்றும், "தாயாகஉம்மைக்காட்டும்" என்றும்பாடித் துதிக்கின்றோம். தாயார் அன்றுள்ள தாய்போலவே என்றும்இருக்கிறாள். இரும்பாள். அதற்குப்பதில் நாமோ சேயாக இருப்பதுமில்லை. சேயாக நம்மைக் காட்டுவதுமில்லை. 'பொல்லாதபிள்ளை யென்றாலும் தாயார் தள்ளாள். புகலிடந் தருவாள்' என்றநம்பிக்கையினல் செல்லாநெறியெல்லாஞ்சென்று கெடுகின்றோம்; மழைமுகங் காணுத பயிர்போல் மடிந்து படுகின்றோம். ஈற்றில் ஆவதென்ன? கரும்பிருக்க இரும்பை மெல்வதும், வழியிருக்கக் குழியில் விழுவதுந்தான். இது தாயாரின் தண்ணளிக்குறைவா? ஒருபோதும் இல்லை. சேயாக நம்மைக் காட்டாத தீமையேயன்றோ!

தாய்க்கு உவந்த செபத்தை ஓதினேமா? தபத்தைப்பண்ணினேமா? தாயே! தஞ்சமென்றோடிவந்தவேளை அஞ்சலென்றருள்புரிந்த அருமையை எண்ணினேமா? எமது நெஞ்சத் தாமரையை நிர்மலபாதத்தில் சூட்டினேமா? மாதாவின்மாசமாகிய இந்தவைகாசி மாசத்திலாவது அவர் அருளைப்பெறஒரு சிறுக[illegible] மா? இல்லையில்லை. [illegible] தாயாக நீர்இருந்து தாசரைப் பிழைபொறுத்துக்காரும்.

மாதாவைப்போற்ற, மாதாவைத்துதிகக நாளும நாழிகையும் பார்க்கவேண்டுமோ! மாதாவுக்கு எந்நாளும் நன்னாளே. எந்நேரமும் பொன்னேரமே. எக்கணமும்நற்கணமே. மாதா செஞ்ஞாயிற்றை ஆடையாக அணிந்திருக்கிறாள். திங்களைத் திருப்பாதத்திற் சேர்த்திருக்கிறாள். கொவ்வைக்கனியைவென்றது அவவது திருச்செவ்வாய். கற்பனைக்கடங்காத அற்புதனைச் சுமந்தது அவவது திருஉதரம். வியாழம்என்னும் எழிலினை உடையாள். மெய்ஞ்ஞான வெள்ளியைப்போல் மிளிர்பவள். மக்கள் மனப்பிணியாகிய சனியை மாயமாய்மாற்றும் மருதது மூலியவள். இவ்வாறு ஞாயிறு தொடக்கம் சனியீறுகளந்நாளும் அவள்நன்னளாகவே யிருக்கின்றது. இதுகுறித்தே நற்சுவை மெச்சும் பெற்றியின்மிக்க நம் பெரியார்ஒருவர்,

> செஞ்ஞாயிற் றுடையாளைச் சேர்திங்கள்
> பதத்தாளைச் செவ்வா யாளை
> இஞ்ஞாலத் தற்புதனை யீன்றாளை
> வியாழமெனும் எழிலி னளை
> மெய்ஞ்ஞான வெள்ளியெனமிளிர்வாளைச்
> சனியகற்றும் மேன்மை யாளை
> அஞ்ஞானந் தெரியாளை அரியாளை
> மரியாளை அஞ்சலிப் பாம்

என்று தெவிட்டத் தெவிட்டத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்.

## மரியாயின்சேனை மகாநாடு

இம்முறை மருதமடுத் திருப்பதியில் மகாஆடம்பரமாய்க் கொண்டாடப்படவிருக்கும் மரியாயின்சேனை மகாநாடு இம் மாசம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 6-00 மணிக்கு மகா வந்தனைக்குரிய யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவரின் பாடற் பூசையோடு ஆரம்பமாகி 22-ந் திகதி பிற்பகல் 5-30 மணிக்குச் சற்பிரசாத ஆசீர்வாதத்தோடு முடிவாகும். மகாமேன்மைதங்கிய அதிமேற்றிராணிஆண்டவரோடு இன்னும்பல மேற்றிராணிமார் களும், குருமார்களுஞ் சமுகங்கொடுப்பார்கள்.

---

இப்பத்திரிகையின் 2-ம்பக்கத்திற் குறிப்பிடப்பட்டிருக்கிற பரமண்டலமந்திரம், பிரிய தத்தயந்திரம், விசுவாசமந்திரங்களிலும் மற்றும் மொழிபெயர்ப்புச் சொற்களிலும் மைசூர்முதலாம் இடங்களில் வழங்கும் வேறுபாடுகளை ஒருநிருபர் அறிவித்திருக்கிறார். வாசகநேயர்கள் அவற்றை ஆராய்ந்து தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் நன்றியறிதலுடன் ஏற்றுப் பரிசீலனைசெய்வதற் குதவியாகவிருக்கும்.

[ ப-ர் ]

### காகிதத் தொழிற்சாலை

இத்தொழிற்சாலையை வாளைச்சேனையில் கட்டுவதெனத் திட்டமிட்டிருக்கிறார்கள். காகிதத்தொழிற்சாலை சம்பந்தமான வேலைகள் ஆரம்பமாகிச் சில மாசங்களாக நடைபெற்றுவருகின்றன. பலஏக்கர் நிலத்திலுள்ள காடுகளை வெட்டி எல்லைக்குக் கம்பிவேலி போடப்பட்டிருக்கிறது. தொழிற்சாலையில் வேலைதொடங்குமுன் அதில் வேலைசெய்கிறவர்களுக்கு வேண்டிய வீடுகளும் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. அடுத்தவருட ஆவணி மாசத்தில் [illegible]தஉற்பத்திவேலை நடை[illegible]ளத் தெரிகிறது.

## வியாதிஸ்தரினது வேதப்பரப்புதல் ஞாயிறு

> "நோய் மிடியாற் பவச்சுமையாற் றிகிலேக்கத்தால்
> நொந்தயரச் செயுநாளு இடுக்கணலே,
> பாய்புலியின் வாயிலுறு மானே என்னப்
> பாம்பின்வாய்த் தேரைஎனப் பதைக்கின்றேனே" ........

என்று ஒரு தபோநிதி பாடிய தேவாரம்ஒன்று தொடங்குகின்றது. உலகமேஒருகண்ணீர்க்கணவாய். சஞ்சலம் பெருகிநிற்கும் இத்தலத்திலே எங்கே பார்த்தாலும் கடும்பிணியால் வருந்துபவர்களைக்காணலாம். ஆனல் அப்பேர்ப்பட்ட துன்பதுயரங்களால் வருந்துபவர்கள் அவைகள் அனைத்தையும் மோட்சதிரவியங்கள் ஆக்கிக்கொள்ளலாம். பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அதைப்பற்றி நீங்கள் அதிகமாக வாசித்திருப்பீர்கள்.

உலகத்திலே கத்தோலிக்கராய் உள்ளபிணியாளர் யாவரும் வருஷத்திலே ஒருவிசேஷநாளைத் தெரிந்தெடுத்து, அன்று தாங்கள் யாவரும் அனுபவிக்கும் வாதைவேதனைகள் யாவையும், நல்லமனதுடனும், பொறுமையுடனும், ஆண்டவருடைய பாடுகளுடன்சேர்த்துப் பரிசுத்த பாப்பாண்டவருடைய சுகிர்தகருத்துகளுக்காகவும், வேதப்பரம்புதலுக்காகவும் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்தால், அதனல் வேதப்பரப்புதலுக்கு உன்னதமான தொண்டைப்புரியலாம்.

1931-ம்ஆண்டு, இந்த இயக்கம் ரோமைமாநகரிலே தொடங்கியது. வருஷாவருஷம் அது வளர்ந்து இப்போது அநேககத்தோலிக்கநாடுகளில் பரவிவருகின்றது. இந்தஇயக்கத்தைப் பரிசுத்த பாப்பரசர் மனப்பூர்வமாய் அங்கீகரித்து ஆசீர்வதித்திருக்கிறார். அதற்கு நன்றியும் கூறி ஊக்கப்படுத்தி உள்ளார். அதற்காக வியாதிஸ்தரின் வேதப்பரப்புதல் ஞாயிறு என ஒருதினமும் குறிக்கப்பட்டிருக்கிறது. இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின் திருநாளாகிய ஞாயிறுதினமே அதற்காகக் குறிக்கப்பட்டதினம். சென்றகிழமை வெளிவந்த ஆங்கில இலங்கைத் திருஇருதய தூதனிலே (Ceylon Messenger of the Sacred Heart) இதைப்பற்றிச் சிறந்தவோர் கட்டுரை உண்டு. இன்னும் இதைப்பற்றி அதிகமாகஅறிய விரும்புவோர், நல்லூர் வண. J. A. இராசநாயகம் O. M. I.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கம்

### தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் முறை

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலைமண்டபத்தில் 12-5-51 சனிக்கிழமை காலை 9-30 க்கு அகிலஇலங்கை ஆசிரியசங்கத் தலைவர் திரு. A. E. தம்பர் அவர்கள்தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1. திரு. வி. துரைசிங்கம் அவர்கள் 'பேச்சுப்பாடம் படிப்பிக்கும் முறை'
2. திரு. பி. சவிரிமுத்து அவர்கள் வாசினை கற்பிக்கும்முறை

## சுதேச வர்த்தமானம்

### அர்ச். இசிதோர் திருநாள்

யாழ்ப்பாணக்குடாநாட்டிலே கமக்காரரின் பாதுகாவலராம் அர்ச். இசிதோர் தனிக்கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஏழாலையிலே அவர் திருநாள் வழமைபோல இம்மாசம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. அதற்கு முந்திய திருவிழாக்கள் வருகிற 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

### குடிதண்ணீர் விநியோகம்

தீவுப் பகுதிகளில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மிகஅதிகமாகவுண்டெனக் கருதப்படும் இடங்கட்கு ஆனிமாசம் 1-ந் திகதிமுதல் நல்லதண்ணீர் லொறிகள்மூலம் விநியோகிக்கத் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எச்ஸ். எம். செல்லத்தம்புஅவர்கள் வேண்டிய ஒழுங்குகள்செய்கின்றார். இப்பொழுது தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாதிருக்கும் இடங்களில் பின்னர் தேவைப்பட்டால் தண்ணீர் விநியோகிக்கவும் திட்டம் ஏற்படுத்தப்படும். சென்றமாசம் மழை பெய்ததினால் சிறிது தாமதித்துத் தண்ணீர் விநியோகிக்க வசதியேற்பட்டது. சில கிராம முன்னேற்றச் சங்கங்கள் உள்ளூரில் தண்ணீர் விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளன.

### முதுதமிழ்ப்புலவரின் மறைவு

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் சென்ற 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை திடீரென்று மாரடைப்பினால் மரணமாயினார். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். பாவன்மையும், நாவன்மையும் மிக்கவர். பல பாடபுத்தகங்களின் ஆக்கியோன். ஈழநாட்டுச் சுதந்திரமாதன்கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற தமிழ் விழாவில் "கண்ணீர்பெருக்கும் கவித்தொகை"யெனும் விஷயம் பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினார். ஈழகேசரியதிபர் பொன்னையா அவர்களின் மரணங்காரணமாக இவர்யாத்தகவிதைகளைச் சுவைத்து முடிந்தது முடியா முன் இவர் மாணித்தது அம்மம்ம! தமிழ்த்தாயின் தவக்குறைவேயாகும். ஈழநாட்டுப் புலவபெருமக்களெல்லாம் இங்ஙனம் ஒருவர்பின்னொருவராக மறையக்காணபலத எண்ணவெண்ண மனம் புண்ணுகின்றது.

தாயினு மன்புடையன் ; சான்றவன் ;
பாவன்மை
மேயினன் ; நல்லதம்பி விண்ணுலகம்
—போயினனே
தாங்குந் தமிழன்னை சார்ந்தவர்கள்
சோர்ந்தலறி
யேங்கும் படிவிடுத் தின்று.

சுவாமிகளிடமிருந்து தண்டுப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென நம்புகிறேன். இந்த ஞாயிறு இம்மாதம் 13-ந்தேதி வருகின்றது.

# சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு

[ தனிநாயக அடிகள், M. A; M. Litt; S. T. D. ]

(முன்தொடர்ச்சி)

பண்டைக்கால இலக்கியச் செல்வங்களைப் படிக்கும்பொழுது, நம்முன்னோர் கொண்டொழுகிய வாழ்க்கையமைப்பின் சிறப்பியல்புகளை ஆராயும்பொழுது, அவர்களுடைய இயற்கையீடுபாடு அழகொடு இரண்டறக்கலத்தல், தூயகொள்கைகள், வாழ்க்கையின் குறிக்கோள்கள், நீதியும் ஒழுக்கமும் ஒருங்கமைந்த உயர்ந்த அரசியலமைப்பு முறை—இவை யாவற்றையும் ஆராயும்பொழுது— இற்றைஞான்று தமிழரென அழைக்கப்பெறும் நாம் உண்மையில், நம் முன்னோரின் வழித்தோன்றல்கள் தாமோ—என்ற ஐயங்கூட என்னையறியாமலே என்னுள்ளத்திலே உதிக்கின்றது. ஐரோப்பிய நாகரிகத்துக்கே அடிப்படையாயிருந்த கிரேக்க நாட்டிற்கு ஏற்பட்டவரலாறே நம்நாட்டிற்கும் ஏற்பட்டுவிடுமோ—என்ற அச்சமுங்கூட உடன்தோன்றுகின்றது. "பைரன்" (Byron) என்ற ஆங்கிலப் புலவர் கிரேக்கநாட்டின் நிலையைக்கண்டு கண்ணீர்சொரிந்தது போலவே, தமிழ் நண்பர் நம்நிலையையுங்கண்டு வருந்துவதற்குக் காரணங்கள் பல உளவென்பதற்கையமில்லை இது நிற்க,

நமக்கு எட்டியுள்ள நூல்களில் கடைச்சங்க நூல்களெல்லாம் தமிழிலக்கியத்தின் "உயர்வு நிலை"யில் இயற்றப்பெற்றன வாகக் கூறுவாருளர். எனினும், பலசான்றுகளிலிருந்து, இவ்விலக்கியமெல்லாம் ஒரு "கடைக்கால" இலக்கியம் என்றே கருதுதற்கு இடமுண்டு. "கடைக்கால" இலக்கியமே இத்துணை சிறந்து விளங்குமென்றால், உயர்வுநிலையில் மலர்ந்த இலக்கியப்பண்பாடு எத்துணை சிறந்ததாயிருந்திருத்தல் வேண்டும்!

இனி, இங்ஙனம் சிறந்தஇச் சங்ககால இலக்கியத்தின் சிறப்பியல்புகளைச் சிறிது ஆராய்வோம். சங்கஇலக்கியச் சிறப்பியல்புகளுள் நம் கருத்தைக் கவரும் முதற்பண்பு "ஒன்றே உலகம்" என்ற உயரிய மனப்பான்மையாம். வெண்டல் வில்கி (Wendell Wilkie) என்ற அமெரிக்க அரசியலறிஞர் எழுதி வெளியிட்ட (One World) "ஒரே உலகம்" என்ற நூலை உலகம் இனிதாய் வரவேற்றது. அந்நூலில் அவர் எழுதிய முதற்சொற்கள் "வருங்காலத்தில் நம் சிந்தனை உலகாங்கு பரந்திருத்தல் வேண்டும்" (In Future our thinking must be world-wide.) இன்றைய இருபதாம்நூற்றாண்டு உலகினர்க்கு இக்கருத்து இத்துணை மகிழ்வு அளிப்பதுபற்றித் தமிழராகிய நாம் சிறுபுன்முறுவல் அரும்பிநிற்கின்றோம். ஏன்? ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னமேதானே, தமிழறிஞர் இதை உணர்ந்திருந்தனர்; உணர்ந்ததை உ[illegible] உரைத்துள்ளனர்.

"யாதும் ஊரே ; யாவருங்
கேளிர்"
"பெரிதே யுலகம் ; பேணுநர்
பலரே"
"எத்திசைச் செலினு மத்தி
சைச் சோறே"
"யாதானு நாடாமல், ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத
வாறு"—என்றெல்லாம்

சங்ககால நூல்கள், யாண்டும் வலியுறுத்துரைத்தல் காண்க. இவ்வுயர் பண்பு தமிழர்க்கு எங்ஙனம் அமைந்தது?

"யவனர்தந்த வினைமாணன்
கலம்
பொன்னொடு வந்து கறியொடு
பெயர்ந்ததன்"

பயனாகவும், மொழிபெயர் தேயங்கட்கும், கடல்கடந்து வேற்று நாடுகட்கும் சென்றதன் பயனாகவும், மூவேந்தருடன் குறுநில மன்னர்க்கும், பிறநாட்டு மன்னர்க்கும் உண்டான தொடர்பாலும் உறவாலும், தமிழர் இத்தகைய பரந்துவிரிந்த மனப்பான்மையையும் நோக்கங்களையும் பயின்றறிந்து வளர்த்துக் கொண்டாராதல் வேண்டும்.

பெருமைவாய்ந்த நம்சங்க இலக்கயத்தின் பிறிதொரு இயல்பு யாதெனின், அஃது எத்துணைத்தொன்மை வாய்ந்ததாயினும்—எக்காலத்தும், எந்நாட்டவர்க்கும் இலக்கியச் சுவையை அளிக்கும் தன்மையாகும். ஷேக்ஸ்பியர், காளிதாஸன், கம்பன்போன்ற புலவர்களைப் படித்து அவர்கள் நமது காலத்தவரே போலத்தோன்றுவதைக்கண்டு இன்புற்று வருகின்றோம். இப்பண்பை "இக்காலத்தன்மை" (Modernity) என்ற தொடரால் குறிப்போம். "இக்காலத்தன்மை" என்ற சிறப்பியல்பு உள்ளதனாலேயே சங்ககால இலக்கியங்கள் என்றும் குன்றா இளமையுடன், புதுமைஅழகும், புதியகருத்தும் பெற்று இன்பம் பெருக்கி வருகின்றன. "இக்காலத் தன்மை"ப் பண்பில், ஐரோப்பிய, ஆசியப் புலவர் யாவரினும் நம் சங்ககாலத் தமிழ்ப்புலவர் சிறப்புற்றொளிர்கின்றனர்.

மேலே நாம் எடுத்துக்காட்டிய "ஒரே உலக" மனப்பான்மையும் அதற்கு அடிப்படையான பரந்தநோக்கமும் நமது பண்பாட்டின் மற்றொரு சிறப்பியல்பிற்குக் காரணமாயின. இதனை tolerance என்ற ஆங்கிலச் சொல்லால் சிறப்பாகக் குறிப்பிடல் சாலும். தமிழகத்தின் அக்கால அரசிலமைப்பு முடிமன்னர் மூவரையும் குறுநில மன்னர் பலரையும் கொண்டது. இப்பேரரசரும், சிற்றரசரும் பிரிந்திருந்தாராயினும் அவர் அனைவரும் "தமிழகம்" என்னும் தனிநாட்டைச் சார்ந்தவராய் தமிழக ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும்காப்பாற்றி வந்தனர். இத்தமிழ்நாட்டு ஒற்றுமையும், வேற்றுநாட்டுத் [illegible]னன்கு இயைந்து [illegible]வந்ததன் பயனாகவே தமிழர் பிறரையும் பிறஉயிர்களையும் தமவேபோற் பேணிவருதற்குத் துணைசெய்தது. நம் தொகை நூல்கள் பல்வேறு சமயக்கோட்பாடுகளையும், அரசியல் தத்துவக் கொள்கைகளையும், தம்முள் முரண்படும் பழக்கவழக்கங்களையும் காட்டுவன. இச்செய்யுட்களை இயற்றியவர் இருபாலாருமாவர்; வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டவர் ஆவர்; வேறுவேறானவாழ்க்கை நிலையிலுள்ளவருமாவர். இவர்களுள் அரசருமுளர்; அலுவலாளருமுளர்; புரவலரும்உளர்; இரவலருமுளர்; இப்புலவர் திருக்கூட்டத்தினுள் கூடல், உறையூர், கருவூர் முதலான, தலைநகரங்களில் வாழ்ந்தவருமுளர்; அரிசில், ஆலங்குடி முதலாக வெள்ளூர், வேம்பற்றூர் ஈறாகஉள்ள சிற்றூர்களில்திகழ்ந்தவருமுளர்.

இன்று "tolerance" என்னும் பண்பினுக்குச் சான்றாக இலண்டன்மா நகரிலிருக்கும் Hyde Park corner இல்பல்வேறு அரசியல் வகுப்பினர், சமயப்பிரிவினர், கொள்கை வேறுபாட்டினர் ஆகியகூட்டத்தவரின் சொற்பொழிவாளர் தத்தம் கருத்துக்களைத் தடையின்றி வெளியிடுவதையும், மக்கள் கேட்பதையும் சுட்டிக்காட்டுவர். 1800-ம் ஆண்டுகட்குமுன் காஞ்சியில் தமிழ்நாட்டுச் சமயவாதிகள் தத்தங் கொடிகளை நிறுவித் தத்தம் சமயங்களைப் பரப்பும் முறையைக்கண்டால், இக்காலமக்கள் என்னகூறுவர்? தமிழ்நாட்டுச் சமயவரலாறு நம்மக்களின் ஒப்பற்ற பெருந்தன்மைக்குச் சான்றாய் விளங்குகின்றது. இப்பெருந்தன்மைக்கு ஓர் அணியாகவேபோலும் நம்இலக்கியத்தில் பற்பல சமயங்களின் நூல்கள் அமைந்துள்ளன. இலத்தீன் மொழி மேல்நாட்டுச் சமயங்களின் மொழியாய் விளங்கிவந்தது. சம்ஸ்கிருதத்தில் இந்தியாவின் சமயங்களைப்பற்றிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆயினும் தமிழிலக்கியத்தில் சிறந்து விளங்கும் சமயஇலக்கியங்களைப் போல் வேறெம்மொழியிலும் இல்லை. சைவரும், வைணவரும், புத்தரும், சமணரும் மகம்மதியரும், கத்தோலிக்கரும், புரொட்டஸ்டாணடாரும் தமக்கு இலக்கியஉரிமை பாராட்டக்கூடிய ஒருமொழி உண்டெனின், அம்மொழி தமிழ்மொழியேயாம். ஆதலால், பெரியபுராணம், இராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சீறாப்புராணம், தேம்பாவணி, இரட்சண்ய யாத்ரீகம்போன்ற நூல்களுக்கு ஒப்பாகச் சொல்லக்கூடிய பல்வேறு சமயங்களுக்குரியநூல்கள் வேறுஎந்த ஒருமொழியின் இலக்கியத் தொகுதியிலுமில்லை யென்று துணிந்துகூறலாம்.

(தொடரும்)

## ஆண்டவர் சரித்திரம்

நமது அச்சியந்திரசாலையிலே விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.

முதலாம்பாகம் பிரதி விலைசதம் 90.
இரண்டாம்பாகம் பிரதி விலைசதம் 90.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலத் திருநாளும்
## கொலம்பகம் பழைய மாணவர் தினமும்

அர்ச். சூசைமாமுனிவரின் அடைக்கலத்திருநாள் இவ்வருடம் அதி பத்தி யருட்சிக்குரியவித்மாய் நடந்தேறலாயிற்று. பெரியவாயில் புதிய சித்திர வேலைப்பாடமைந்தமுன்றில், தாபனத்திற்கோர் தனிச்சிறப்பை அளித்துநின்றது. ஆலயமும் முன்பந்தரும் மலர்களாலுந், தளிர்களாலும், பூமாலை கொடிகளாலும், பலவர்ண மின்சார தீபங்களாலும் தேசோமயமாய்இலங்க 28-4-51 சனிக்கிழமை இரவு 7-00 மணிக்கு வண. ஜே. பிரான்சீஸ், வண. ஏ. மிக்கேல்சாமி சுவாமிமார் துணைபுரிய அதிவண. இ. பொமிக்கோ சுவாமியார் அவர்களால் ஆசிரியகலாசாலை மாணவ - மாணவிகளான பாடகர்குழாமுடன் ஒலிபெருக்கிமூலம் மாலைஆராதனை பாடப்பட்டது.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு மகாமேன்மை தங்கிய மேற்றிராணி ஆண்டவர் அவர்களைத் தாபனவாயிலில் வண. தாபனத் தலைவரும், வண. குருமாரும், பழைய புதியமாணவர்களும் பெருந்திரளாய்ச் சென்று வரவேற்றுக் கோவிலை அடைந்ததும் வண. எல். ஏ. சிங்காரயர், வண. ஜே. பிரான்சீஸ் சுவாமிமார் துணைபுரிய ஆண்டவர் அவர்கள் திருநாள் பாட்டுப் பூசைநிறைவேற்றி, அர்ச். சூசையப்பர் பேரில் நாம்வைக்கவேண்டிய பக்தியென்னும்விஷயமாய் அரியதோர் பிரசங்கம் உரைத்துத் தமது திருக்காசீரை ஈந்தார்.

காலைப்போசனம் முடிந்ததும் பழைய புதிய மாணவரிடையே காபந்தாட்டப்போட்டி ஒன்று நடைபெற்றது. பகல் 11 மணிக்குத் தாபனப் பழையமாணவர் சங்கத்தின் தலைவரும் நிரந்தர தனாதிகாரியுமாகிய வண. எல். ஏ. சிங்காரயர் சுவாமியார் அவர்கள் தலைமையில் பழைய மாணவர்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் செபத்துடன் ஆரம்பமானது. காரியதரிசியால் சென்றவருட அறிக்கையும் பொதுக் கூட்டவரலாறும் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்மேல் பின்வரும் தீர்மானங்கள் தீர்க்கமாய் ஆலோசிக்கப்பட்டு ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1. ஒழுங்காய் உறுப்புரிமைப்பணங் கட்டிவரும் அங்கத்தவர்கட்கு மரண சகாயஉபகரிப்புக் கொடுபட வேண்டுமென்றும், வயோதிபர்களாயிருக்குந் தொழிலாளர்கள் தங்கள் உறுப்புரிமைப் பணத்தை எவ்வகையாலும் தொடர்ந்துசெலுத்தச் சக்தியற்றவர்களென்று கட்டளைச்சுவாமிமார் கொடுக்கும் உறுதிப்பத்திரத்தை மேற்படி சங்க நிர்வாகசபையார் ஏற்றுக்கொண்டால் அவர்களைச் சங்க உறுப்புரிமைப் பணம் செலுத்துவதில்நின்று நிறுத்தி வைக்கலாமென்றும், அவ்வகை நிறுத்தல் அவர்கள் மரணலாபத்தைப் பெற எவ்வகையாலும் தடையாகாதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

2. பழையமாணவர்போரால் கோவிலில் நடந்தேறும் ஆராதனைச்செலவுகட்கும் மற்றுஞ்செலவுகட்கும் பழைய மாணவர் ஒவ்வொருவரும் பணம் உபகரித்து ஆதரிப்பது கடமைப்பாடாயிருப்பதால் ஆசிரியர்களின் சம்மதத்தைப்பெற்று உறுப்புரிமைப் பணத்தைப் பாடசாலைகளின் பிரதம முகாமைக்கார சுவாமியார்மூலம் சேகரிப்பது தகுந்தமுறையெனத் தீர்மானிக்கப்பட்டது.

3. பழையமாணவர்கள் அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்தில் தாம் அடைந்துகொண்ட நன்மைகளை நினைவுகூர்ந்து பெருந்தொகையாய்த் திருநாளுக்குச் சமுகந்தர வசதியாய் முன்போல் திருநாளுக்கு அடுத்த திருநாட்களையும் விடுதலையாக்கி முகாமைக்காரசுவாமியார் தமது விடுமுறை அறிவித்தலில் சேர்க்கவேண்டுமெனத் தீர்மானித்துத் தலைவர் அவர்களை அதற்காவனசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. பழையமாணவர், தாபன சயன மண்டப கட்டிடத்திற்குப் பணம் உபகரித்தகாரணமாய் 29-ம் 30-ம் ஆண்டுகட்கான உறுப்புரிமைப்பணம் நீக்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

வண. தலைவர்அவர்கள் முன்னிலுந் தொகையான பழைய மாணவர்கள் இம்முறை சமுகந்தந்ததையிட்டுத் தம் மகிழ்ச்சியையும் நன்றியையுந் தெரிவித்து வருங்காலத்தில் இச்சங்கம் உன்னதநிலையை அடைந்து பழைய மாணவர்கட்குந் தாபனத்திற்கும் பலவகையிலும் பயன்படக்கூடிய தான அறிகுறிகள் காணப்படுகின்றதெனவுங் கூறினர். செபத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

மத்தியான விருந்தின்போது வண. தலைவர்அவர்கள் சமுகங்கொடுத்துப் பழையமாணவர் ஒவ்வொருவரோடும் கலந்துரையாடிச்சென்றார்.

தேநீர் உபசாரணைக்குப்பின் 4-30 மணிக்கு யாழ்ப்பாணப் பட்டணத்தின் பலபாகங்களிலுமிருந்துவந்த பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்தில் நிறைந்து தேங்கியிருக்க வண. ஜே. பிரான்சீஸ், வண. ஏ. மிக்கேல்சாமி சுவாமிமார் துணைபுரிய, மகாவண. விக்கார்ஜெனறலான ஹென்றி லெக்குத்துார்சுவாமிஅவர்களால் மாலைஆராதனை பாடப்பட்டதும் பாடகர்குழாம் மாதவன்கீதம் இசைத்துவர ஆசிரியமாணவர்கள் பூந்தண்டில் சூசைமாதவனின் திருச்சுரூபத்தைத் தாங்கிவரச்சுற்றுப்பிரகாரமாய்த்தாபனவிளையாட்டுமைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார பந்தருக்குக் கொண்டுசென்று எழுந்தேற்றஞ்செய்யப்பட்டது.

ஒலிபரப்பிமூலம் வண. எம். எஸ். நல்லையாச்சுவாமிஅவர்களால் பிரசங்கமும், ஆசிரியர் எஸ். ஜெரேமியாஸ் அவர்களால் அடைக்கலச் செபமும் வாசிக்கப்பட்டுச் சுற்றுப்பிரகாரம் தொடர்ந்துநடந்து கோவில் முன்பந்தரை அடைந்ததும் சற்பிரசாத ஆசீர்வாதம்அருளப்பட்டுத் திருநாள் மங்களகரமாய்ப் பூர்த்தியாயிற்று.

— கடிதர்

---

—1900-ம் ஆண்டில் ஆபிரிக்காவில் 12,00,000 கத்தோலிக்கர் வசித்தனர். தற்போது 1,40,00,000 கத்தோலிக்கர் வசிக்கின்றனர். 1900-ம் ஆண்டிலிருந்த கத்தோலிக்கர் பெரும்பாலும் ஐரோப்பியர். ஆனால் தற்போதுள்ள கத்தோலிக்கருள் பெரும்பான்மையார் ஆபிரிக்கர். ஆகையினால் ஆபிரிக்கா ஓர் கத்தோலிக்கநாடாகவருமா?

— அயர்லாந்தின் பிரசாதிபதியாயிருக்கும் ஓகெல்லிஎன்பவர் வருகிற ஆனிமாதம் 3-ந் தேதியன்று பத்தாம் பத்திநாதபாப்பரசருக்கு முத்திப்பேறு பட்டம் சூட்டும் திருச்சடங்கிற்குச் சமுகமளிப்பார்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் கிருபையாலும், பாத்திமாஅன்னையின் சலுகையாலும், சஞ்சூசையப்பர், முத். மாட்டின் தே பொரஸ் இவர்களுடைய மன்றாட்டாலும் எனது நெஞ்சுவலி சற்றுக் குணமானது. முற்றிலும் குணமடைய யேசுவின் திருஇருதயம் கிருபை பாலிப்பதாக! பிரசுரதாமதத்திற்கு அன்புநிறைந்த திரு இருதயம் மன்னிப்பு அருளுவதாக.

பிரான்சிஸ்

## அமெரிக்க செய்தி

### ஹங்கேரிய வைத்தியர்

தனதுதாய்நாடான ஹங்கேரியில் கம்யூனிஸ்தர்கள்செய்யும் அட்டூழியத்தைப் பொறுக்கமுடியாது, திரு. டெனிஸ் வரகோ என்னும் வைத்தியர் 1945-ம்ஆண்டில் தனதுதாய்நாட்டை விட்டு வெளியேறினார். இப்பொழுது அமெரிக்காவில் சாந்தமான ஒருவாழ்க்கை நடத்துவதே தமதுநோக்கமென்று கூறுகின்றார். ஹங்கேரியிலிருந்து கம்யூனிஸ்தர்கள் வெளியேறியபின் தங்கள்தாய்நாட்டைப் பார்ப்பதற்காகப் போவதேயொழிய, அதற்குமுன் அமெரிக்காவைவிட்டு வெளிப்படுவதில்லை என்றும் இவர் கூறுகிறார்.

ஹங்கேரியில்உள்ளபல வைத்திய சாலைகளில் இவர் சேவைபுரிந்திருக்கிறார். கம்யூனிஸ்தர்களின் அட்டூழியத்தைப் பொறுக்கமுடியாதென்றநிலையில் நமது தாய்நாட்டைவிட்டு வெளியேறினார். ஹங்கேரியிலிருந்து வெளியேறிய பின்பு அமெரிக்க அதிகாரத்துக்குக் கீழுள்ள ஆஸ்திரியாவில் சென்ற மாசிமாதம்வரை தங்கினார். பின் இவரை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு மேரிலண்ட்என்ற இடத்திலுள்ள திருச்சபை ஒழுங்குசெய்தது.

திரு. வரகோ அமெரிக்காவுக்குவந்து சிலநாட்களுக்குப்பின் அவரதுமனைவியும் மகனும் அங்குவந்தனர். இப்பொழுது திரு. வரகோ அமெரிக்காவிலுள்ள ஒருவைத்தியசாலையில் சேவை புரிகிறார். "நோயாளிகட்கு உதவிசெய்வதும், நான் ஒரு அமெரிக்கனுவதுமே எனது நோக்கம்" என்று திரு. வரகோ குறிப்பிடுகிறார்.

### "உண்மையைப் பரப்புதலே சமாதானத்துக்கு வழி"

வாஷிங்டன் — வைகாசி 3

"மக்களுக்கிடையில் உண்மையைப் பரவச்செய்தால், சமாதானம் தானுகவே வரும்" என்று சனாதிபதி ட்ரூமன் அவர்கள் 14 தேசங்களிலிருந்து அமெரிக்காவுக்கு வந்திருக்கும் 35 பத்திராதிபர்கள் முன்னிலையிற் கூறினார்.

இரு கிழமைகளாக அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணஞ் செய்தபின்பு, அப்பத்திராதிபர்கள் சனாதிபதியை அவரது இல்லத்திற் சந்தித்தனர். 'எங்கள் நாடாகிய இந்நாட்டில் நீங்கள் நேரத்தைச் சந்தோஷமாகக் கழித்திருப்பீர்களென்று நம்புகிறேன். இங்கே நடப்பனவற்றை நீங்கள்கண்டு, அமெரிக்காவைப்பற்றிமதிப்பிடுங்கள்" என்றுகூறிச் சனாதிபதி ட்ரூமன் 35 பத்திராதிபர்களையும் வரவேற்றார்.

சுற்றுப்பிரயாணஞ்செய்யும் 35 பத்திராதிபர்களிலும்— எகிப்து, இந்தியா, அல்ஜீரியாபோன்ற இடங்களிலிருந்து வந்திருக்கும்பத்திராதிபர்களுமஉண்டு. இவர்கள் இக்கிழமை முடிவுவரைக்கும் அமெரிக்காவில் தங்கி, சனிக்கிழமையளவில் தத்தம்நாடுகளுக்குப் புறப்படுவார்கள்.

### வைகாசித்தின விழா

நியூயோக் — வைகாசி 3

கம்யூனிஸ்தர்களாற் கொண்டாடப்பட்ட வைகாசித்தினவிழாவில் இங்கு 6,500 பேரளவிற்தான் பங்குபற்றினர். இன்னும் 13,000 பேர் புதினம்பார்ப்பதற்காகத் தெருக்களிற் கூடியிருந்தனர். சென்றவருடம் வைகாசித்தின விழாவிற் பங்குபற்றியவர்களிலும் பார்க்க இம்முறைத்தொகை 5,000 பேர் அளவில் குறைந்திருக்கிறதென்று கணிக்கப்படுகின்றது.

உலகத்தின் மறுபாகங்களிலும் நடந்த வைகாசித்தினவிழாவில் இம்முறை உற்சாகம் குறைந்திருக்கிறதென்று கூறப்படுகின்றது. லண்டனில் இம்முறை இவ்வைபவம் மிகவும் குறைவாகக் கொண்டாடப்பட்டதென்று தெரிகிறது. வைகாசித்தின விழா கொண்டாடப்பட்ட முறையிலிருந்து கம்யூனிஸ்தர்களின் மீதுள்ள அபிமானம் குறைகிறதென்று தெரிகிறது.

(யூஸிஸ்)

## அறிக்கை

கண்டி, பாப்பரசர் குருமடத்தில் கல்விபயிலும் தமிழ் மாணவருக்கென நிறுவப்பெற்றுள்ள மரியன்னைத் தமிழ்க்கழகத்தின் பொன்யூபிலி விழா நிகழும் வைகாசிமாதம் 16-ந் திகதி வெகுசிறப்புடன் கொண்டாடப்படும். ஆசிச்செய்திகள் அனுப்பவிரும்புவோர் தயவுசெய்து 14-ந் திகதிக்கு முன்னதாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

The President,
Tamil Kazhagam,
Papal Seminary,
Kandy.

## வளருந் தமிழ்மொழி

### சரித்திரத்தில் மிகமுக்கியஇடம்

### தலைவர்ஸ்ரீநிவாஸன் விசேஷசெய்தி

தமிழ்விழாப் பொதுத்தலைவர் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்கள் விழாபற்றிப் பின்வரும்செய்தியை இந்தியசெய்திஸ்தாபனத்துப் (பி.ரீ. ஐ.) பிரதிநிதிமூலம் விடுத்துள்ளார்.

தமிழ்ச்சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டுவிட்டது. இழந்துபோன ஆத்துமாவை மீண்டும்பெற்றுள்ள தமிழ்மக்களின் வாழ்க்கையில் இதுஒருமகத்தான ஸ்தானத்தைப் பெறும்என்பதற்கு எவ்விதசந்தேகமும் இல்லை. தமிழ்மலர்ச்சியுற்றுவரும் இந்நாட்களில் யாழ்ப்பாணத்துத் தமிழ் விழாவானது சரித்திரத்திலே ஒரு பெருமாற்றத்தை ஏற்படுத்திவிட்டது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்விழாவை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்ட கலைக்காட்சியை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். இவற்றிலும்மேலாகத் தமிழ்விழாப் பிரசாரப்பகுதியினர் தயாரித்து வெளியிட்டுள்ள **யாழ்ப்பாணம்** என்ற அழகுவாய்ந்த சிறுபிரசுரம் என்னைக்கவர்ந்துவிட்டது. கண்ணுக்கும் கருத்துக்கும் அரியவிருந்தாக விளங்கும் இப்பிரசுரத்திற் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைப்பற்றியும், அங்குள்ளமுக்கியஇடங்களைப்பற்றியும் அறிவதற்கு இது மிகவும் உதவியானது.

தமிழ்விழாவை ஒழுங்குசெய்த நிர்வாகசபையினர் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஏனையோருக்கும் ஆகவேண்டிய சகலவசதிகளையுஞ்செய்துவைத்தமை பெரிதும்பாராட்டற்குரியது. தமிழ்மலர்ச்சியுற்று வளர்ந்துவருகின்றதென்பதற்கு யாழ்ப்பாணத் தமிழ்விழாவில் அலைமோதிய சனசமுத்திரமே சான்றுபகரும்.

### மகாவித்துவான் கணேசையருக்குக் கௌரவம்

### பொன்னுடைபோர்த்திய வைபவம்

யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற தமிழ் விழாவின்போது யாழ்ப்பாணம் மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் பொன்னுடைபோர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். ஐயர் அவர்களின் அரும்பெரும் தமிழ்ப்பணியைப் பற்றியும் அன்னாரின் தமிழ்இலக்கிய இலக்கணப் போராற்றலைப்பற்றியும் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பாராட்டிப்பேசினார்கள். தமிழ்வளர்ச்சிக் கழகத்தலைவர் ஸ்ரீ ஆவினாசிலிங்கம்செட்டியார் அவர்களும், விஞ்ஞானமேதை டக்றர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஐயரவர்களுக்குப் பொன்னுடைபோர்த்தினர். அப்போதுசபையினர் கரகோஷம்செய்து பெருமையடைந்தனர். ஐயர்அவர்கள் பேசும்போது தமிழ்விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவிகளுக்கு அடைக்கலமே!

## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

எங்கள்பட்டாளத்தில் ஒருவாலிப வீரன் இருந்தான், அவன் பட்டாளத்திற்சேர்ந்து ஒருவருஷந்தான் ஆகிறது. அவன்மேல் எனக்குஅதிகபிரியம். அவன்நல்லவன், செம்மறிப்புருவைபோல் சாந்தமானவன்; தன்னுடன்வசித்தவர்களுடன் தர்க்கிக்கவோ, சண்டையிடவோ போகமாட்டான். கூட்டங்களுக்குப்போகமாட்டான். கூட்டங்களுக் குப்போகவெட்கப்படுவான். ஆனால், தன் நாட்டுக்காகத் தைரியத்துடனும் பெருமையுடனும் யுத்தம்புரிவான். கடவுளுக்காகவோ ஒருசிறு துரும்பைபுதலாய் அசைக்கமாட்டான். கடவுள்மேல் தனக்குள்ள நேசத்தையும் பிரமாணிக்கத்தையும் காண்பிக்கவேண்டிய சந்தர்ப்பம்வந்தால், அவனுடைய தைரியம் எங்கேயோபோய்விடும். இவனைப்போற்பலரை நான் பட்டாளத்தில் பார்த்திருக்கிறேன். எதிரியின் ஈட்டியின்முன் துணிவுடன் நிற்பார்கள். ஆனால் வேதகாரியங்களைப்பற்றி யாராவது கேலிசெய்தால், பயந்து வேதாப்பியாசத்தை அடியோடுவிட்டுவிடுவார்கள்.

இந்தவாலிபன்பட்டாளத்திற்சேர்ந்த தொடக்கத்தில் ஒவ்வொருநாளும் செபித்துவந்தான். அவனுடைய தோழர்கள் இதைக்கவனித்தனர். அவனைக்கேலிபண்ண ஆரம்பித்தனர். அதனால் செபிப்பதையே விட்டுவிட்டான். சிலுவை அடையாளம்வரையும் வழக்கத்தைமுதலாய் நாளடைவில் கைவிட்டான். ஒரு ஞாயிற்றுக்கிழமை அவன் பூசைக்குப்போய்வந்ததை அவர்கள் பார்த்ததும் அவனைஎவ்வளவு பரிகாசம் செய்தார்களென்றால் அன்றிலிருந்து அவனுக்குக் கோவிலில்லை. ஞாயிறு பூசை கிடையாது. திவ்வியபூசையையும் மறந்தான். இதனை அவனே எனக்கு அறிவித்தான்: அவனுடைய தோழர்கள் தங்களுடன் தகாதஇடங்களுக்கு அவனைக் கூட்டிச்சென்றனர். முதலில்அவை அவனுக்குவெறுப்பாய் இருந்தன. பின் அவைகளை அவனே விரும்பித்தேடினான்.

மனிதனுக்குப்பயந்து கடவுளைமறப்பது பெரியதவறுஎன அவனிடம் நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். மனிதன் கேலிசெய்வான் என்று அஞ்சி மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் துரோகம்செய்யக்கூடாது என்றேன். "உன்னை இப்பொழுது உன்தோழர்கள் கேலிசெய்கிறார்கள். வேதக்கடமைகளை நிறைவேற்றுதபடி தடுக்கிறார்கள். நீயும்அவைகளை நிறைவேற்றுதிருக்கிறாய். அவர்கள் உன்கண்முன் உன்னைப்புகழ்வார்கள். நீ மறைந்ததும் பெரும்கோழைஎன உன்னை இகழ்ந்து பேசுவார்கள். உன்னைமதிக்கவும் மாட்டார்கள்" என்றேன். என்வார்த்தைகள் யாதும் பயன் தரவில்லை. எவ்வளவோ சொல்லியும் பயனில்லையென்று கண்டதும் அவனுக்குப் புத்திசொல்வதை விட்டுவிட்டேன். ஆனால், அவனுடன் அடிக்கடிபேசி, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நன்மைசெய்துவந்தேன். எப்படியாவது அவன்மனது மாறுதாஎன்று நினைத்தேன். ஆனால், நாளாகநாளாக அவனுடையநிலைமை மேலதிகமாகி வந்ததேயொழியத் திருந்தவில்லை. ஆயினும், நமது பரலோகஅரசி குறுக்கிட்டு, நித்தியகேட்டிலிருந்து அவனைக் காப்பாற்றினாள்.

அன்று நமது பரலோக அன்னையின் திருநாள். ஜெயமாதாக்கோவிலுக்கு நான்புறப்பட்டுக்கொண்டிருந்தேன். அந்தக்கோவில் பரீஸ்பட்டணத்தில் இராசஅரண்மனைக்குச் சமீபத்தில் பலபாரியகட்டடங்களால் மறைக்கப்பட்டுநின்றது. பாவிகளை மனந்திருப்புவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு சபையின் அங்கத்தினர் இந்தக்கோவிலில்தான் கூடுவார்கள். மோட்சபாதையை விட்டுத்தவறியபலர் இங்கு தேவஅன்பின் அழைப்புக்குச் செவிசாய்த்திருக்கின்றனர். அரச அரண்மனைப்பக்கமாய் நான்செல்கையில் என்வாலிபநண்பன் அவன்போக்கில் சுற்றிக்கொண்டுதிரிவதைக் கண்டேன். கடைசியாகஅவன் ஒரு கடைக்குமுன்போய் வேடிக்கைபார்த்துக்கொண்டு நின்றான். நான் அவனை அணுகி "எங்குபோகிறாய்? இங்கு என்னசெய்துகொண்டு நிற்கிறாய்? என்றுகேட்டேன்.

நேரத்தைஎப்படியாவது செலவழிக்கவேண்டுமல்லவா? சினிமாபார்க்கும்படி நானும் இன்னொருதோழனும் உத்தரவுபெற்று வெளியேறினோம். ஆனால் திடீரென அவன் எங்கேயோ செல்லவேண்டிநேரிட்டது. எனக்குத் தனியே சினிமாவுக்குச்செல்லப் பிரியமில்லை. அதனால்இங்கு சுற்றிக்கொண்டிருக்கிறேன்.

"அப்படியானால், தம்பி, என்னுடன்வா. நல்லநேரப்போக்கு இருக்கும், நிச்சயம்.

"எங்கேபோகிறீர்கள்?" என அவன் பிரியத்துடன் கேட்டான்.

"இந்தத்தெருவில் இன்னும்சிறிது தூரந்தான் போகவேண்டும். ஜெயமாதாக் கோவிலுக்குப்போகிறேன்."

"எங்கே? ஜெயமாதாக்கோவிலுக்கா?" என ஆச்சரியத்துடன்கேட்டான்.

"ஆம், வா பயமாயிருக்கிறதா? உன் வீட்டில் இருக்கையில் ஒவ்வொரு நாளும் நீ கோவிலுக்குப்போய்வந்தாயல்லவா? இப்பொழுது ஏன்போகக் கூடாது? இன்றுநல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதல்லவா?

"கோவிலைப்பற்றித் தயவுசெய்து என்னிடம்பேசவேண்டாம். நெடுங்காலமாக நான் கோவிலில் கால்வைத்ததேயில்லை. கோவிலுக்குப்போய் என்னசெய்ய? எல்லாச்செபங்களையும் மறந்துபோனேன். பரமண்டல மந்திரம்முதலாய்த் தெரியாது. உங்களுக்குவிருப்பமானால் நீங்கள் போகலாம்? நான்வரப்போவதில்லை."

அவனைக்கூட்டிச்செல்லத் திரும்பவும் முயன்றேன். சற்றுநேரம் யோசித்துவிட்டு, வரமுடியாதென்று தலையையசைத்தான். அவனைவிட்டு நான் தனியே நடந்தேன். வேண்டுமென்று மெதுவாகவே நடந்துசென்றேன். அவன் என்னசெய்கிறான்என்று கவனிக்கும்படி பலமுறை பின்திரும்பிப்பார்த்தேன். தூரத்தில் ஏதோ அரைமனதுடன் என்னைப்பின் தொடர்ந்து அவன் வந்துகொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் வரப்பிரசாதத்துடன் போராடினான்என அறிந்துகொண்டேன். அவன்வரட்டும்என்று ஒருகடைஜன்னலுக்குமுன் நின்றேன். அவனும்வந்து என் அருகில்நின்றான். "வா, கோவிலுக்குப்போவோம். அங்கு போக உன்உள்ளம் உன்னைத் தூண்டுகிறது. செருக்கினால் நீ வரமாட்டேன் என்கிறாய்" என்றேன். அவன் பதில் பேசவில்லை. பின் அவனைப் பிடித்துக் கோவில்பக்கமாய்த் திருப்பி, "நட, நேரே ஜெயமாதாகோவிலுக்கு! அன்னைஉனக்காக அங்கு காத்திருக்கிறாள்" எனப் பட்டாளத்தில் பேசுகிறாப்போல் பேசினேன்.

ஒருவார்த்தையும்சொல்லாமல்அவன் என்னுடன் நடந்தான். மௌனமாகவேசென்று கோவிலுள் நுழைந்தோம். கோவில்நிறைய விசுவாசிகள் குழுமியிருந்தனர். அதைக்கண்ட என்நண்பன் அதிசயித்தான். "பரீஸ்மாநகரிலும் கோவிலுக்குச்செல்கிறவர்கள் இத்தனைபேர் இருக்கிறார்களா! என்று கேட்டான். பாரிஸ்பட்டணத்து மக்களும் மோட்சம்செல்ல விரும்புகிறார்கள்என உனக்குத்தெரியாதா?" என நான் மெதுவாகக் கூறினேன்அங்கு எங்கள்இருவருக்கும்வசதியான இடம் கிடைத்தது. பீடம்அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாலை ஆராதனை இன்னும்தொடங்கவில்லை, கோவிலில் நிலவிய அமைதி அவனுள்ளத்தில் மாற்றம்உண்டாக்கியதைக் கவனித்தேன். வயோதிப குருப்பிரசாதிஒருவர் சோப்பிளிசும் ஸ்ரோலாவும் அணிந்துகொண்டு பீடத்துக்குவந்தார். பாடகர்குழாம் ஒருபாட்டுப்பாடியபின் அவர் பிரசங்கத்தொட்டியில் ஏறினார். அப்பொழுது கடைக்கண்ணால் என் நண்பனைநோக்கினேன். முழுக்கவனத்துடன் பிரசங்கத்துக்கு அவன் செவிகொடுத்திருந்தான். பாவிகள்மீது மாமரி கொண்டிருக்கும் இரக்கத்தைப்பற்றிக் குருவானவர் பிரசங்கித்தார்.

பிரசங்கத்தின்போது என்நண்பனைப் பலமுறைபார்த்தேன். இமைகொட்டாமல் குருவானவரையே கவனித்துக்கொண்டிருந்தான். "கடவுளுடைய கரம் அவனுடையஉள்ளத்தைத் தட்டுகிறது. அதற்குஅவன் செவிகொடுப்பானக" என நான் மனதுக்குள்சொல்லிக்கொண்டேன்.

பிரசங்கத்துக்குப்பின் பிரார்த்தனை. "பாவிகளுக்கு அடைக்கலமே" என்று குருவானவர்சொல்ல, விசுவாசிகள் யாவரும் "எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்றனர். அந்தவினாடியில் அந்தவாலிபவீரனால்தன் உணர்ச்சிகளை அடக்கமுடியவில்லைப்போலும், கண்ணீர்வடிக்க ஆரம்பித்தான். முழந்தாளிட்டு முகத்தைக் கைகளால்மூடிக்கொண்டான். தேவதாய் கடைசியில் வெற்றிபெற்றாள். பத்திமுயற்சிகள்எல்லாம் முடிந்தபிற்பாடு, கூட்டம் கலைந்தது. ஆனால் என்நண்பனோ அசையவில்லை. தலைகுனிந்து செபித்துக்கொண்டேயிருந்தான். நெடுநேரத்துக்குப்பின் அவன்தோள்மீது என் கையைவைத்து "ஜோண், நேரமாகிறது. கோயிலைப் பூட்டப்போகிறார்கள்" என்றேன். அவன் ஆச்சரியத்துடன் என்னைநோக்கி "அதற்குள் நேரமாகிவிட்டதா?" என்றான். நான் என் கடிகாரத்தைக் காண்பித்தேன். "ஏறக்குறைய இரண்டு மணிநேரம் கோவிலில் இருந்திருக்கிறோம்" என்றேன்.

கோயிலைவிட்டுக் கடைசியில் வெளியேறியவர்கள் நாங்கள்இருவருமே. முதலில் சற்றுநேரம் இருவரும் பேசவேயில்லை. பின் அவன் தன்உணர்ச்சிகளை வெளியிட்டான். என்னைக்கட்டிப்பிடித்து, நான்செய்தஉதவிக்காக கண்ணீர்அழுகையுடன் நன்றிகூறினான். "அந்தவயோதிப குருவானவரின்வார்த்தைகள் என் மனதைமாற்றின. அந்தவார்த்தைகள் இன்னும் என்செவிகளில் ஒலிக்கின்றன" என்றான்.

"இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை, நீ ஒரு இராணுவவீரன், அந்தக்குருவானவரும் ஒருகாலத்தில் இராணுவ உத்தியோகஸ்தராயிருந்தார்" என்றேன் நான்.

சிலநாட்களுக்குப்பின் நானும்அவனும் ஒருகுருவானவரிடம் சென்றோம். மந்தையைவிட்டு விலகிப்போன ஆடுகளைத் திரும்பச்சேர்ப்பதில் தம்வாழ்நாளைச் செலவழித்தவர்அவர். அவர் அவனுடைய பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டார். கத்தோலிக்கவீரர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒருசபையில் அவனைச்சேர்த்தார். அதில்அவனுக்கு நல்லபலதோழரும், புத்தகங்களும், நன்மாதிரியும், ஆலோசனைகளும் கிடைத்தன. அதிலிருந்து உத்தம கத்தோலிக்கனாக ஒழுகினான்.

(ஞா. தூ.)


# St. Mary's College for Women,

## Tuticorin.

Re-opens on July 1, 1951 for Junior Classes; for the Senior, Inter, class commences on 22nd June.

Subject to the final approval of the University for the opening of classes for B. A. and certain subjects of the Intermediate, the following groups are offered :-

**Intermediate :-**

(a) Mathematics, Physics and Chemistry.
(b) Natural Science, Physics and Chemistry.
(c) Ancient History, Modern History and Logic.
(d) Mathematics, Indian History and Logic (for the Senior Inter only).

**B. A.**

(a) Group 1-b. Mathematics with pure Geometry and Astronomy.
(b) Group 1v-b. Economics and History with Politics as special subject.

The second languages offered in the Inter and B. A. are Tamil and Malayalam.

**Location.** Amidst healthy surroundings, away from the bustle and dust of the town. The college faces the Sea.

**Hostel.** Vegetarian and Non-Vegetarian meals are provided and all necessary amenities are also provided.

Apply before June 25.

**TO THE PRINCIPAL.**


— ஜேர்மனியிலுள்ள றீ ஜெண்ஸ்பேர்க் என்னும்நகரில் சுயமரியாதைச் சங்கம் என்று ஓர் சங்கம் ஏற்பட்டிருக்கின்றது. இதிலுள்ள அங்கத்தவர்கள் மரியாதைக்கேடான சினிமாப் படங்கள், புஸ்தகங்கள் பத்திரிகைகளைப் பகிஷ்கரிப்போமென்று வாக்களிப்பர். இச்சங்கம் அந்நகரிலுள்ள கத்தோலிக்கரின் முயற்சியினாலேயே ஸ்தாபிக்கப்பட்டது. மரியாதைக்கேடான ஓர் சினிமாப்படம் காட்டப்பட்டால் அச்சங்கம் அப்படத்தைப்பற்றிய கண்டனங்களை எழுதி வெளியிடுவதோடு, தெருநீளம் சுற்றுப்பிரகாரமாய்ச் சென்று அப்படத்தைப்பார்க்காது விடுமாறு சனங்களை ஏவியும்விடுவர்.

— துருக்கிஅரசாங்கமும் பரிசுத்தஸ்தானமும் தங்களுக்கிடையில் ஸ்தானிகர்களை அனுப்பும் பிரச்சனையைப் பற்றி ஆலோசிக்கின்றனவென்று துருக்கிய பிறதேசவியவகார மந்திரியார் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

—※—

## புடவைக் களவு

சென்ற வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்த புகையிரதத்திலிருந்து ரூபா 50,000 பெறுமதியான புடவைகள் மாயமாய் மறைந்ததுபற்றி நகர்காவலரும் புகையிரத பந்தோபஸ்து அதிகாரிகளும் விசாரணை செய்துவருகின்றனர். மொத்தம் 1,60,000 ரூபா பெறுமதியானபொருட்கள் குறித்தபெட்டியில் ஏற்றப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. பெட்டியின் பூட்டுகளும் முத்திரைகளும் உடைபட்டுக்கிடந்ததை அநுராதபுரியிலேயே கண்டனராம்.

## தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் 5-வது பரிசுத்திட்டம்

இக்கழகத்தின் 5-வது பரிசுத் திட்டத்துக்குரிய ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சிக்கழகம் செய்துகொண்டிருக்கிறது. அதற்கு 1949-ம் 50-ம் ஆண்டுகளில் வெளியான நூல்கள் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டுபிரதிகள் காரியதரிசி—தமிழ்வளர்ச்சிக்கழகம், சர்வகலா சாலைக் கட்டடம், சென்னை 5. என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு எழுத்தாளர்களையும், வெளியீட்டகங்களையும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. வைகாசி 31-ந் திகதிக்குள்வரும் நூல்களே பரிசிலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். முன்பே அனுப்பியவர்கள் மறுபடியும் அதே நூல்களை அனுப்பவேண்டியதில்லை. அனைவரும் இத்திட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## பாலியக் குற்றவாளிகள்

8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடையிலுள்ள பாலியவயதுக் குற்றவாளிகளின் நலனைக்கோரி நவீன முறையில் 3 பாடசாலைகள் ஹிக்கடுவையில் அரசினரால் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் 650 இளைஞர்களுக்கு இடவசதி இருக்கும்.

## 115 வயதுடைய மாது

காம்பன்கரைச்சியைச் சேர்ந்த பகுதியில் 115 வயதுடைய சி. பிரகாசியம்மா என்னும்பெண் இருக்கின்றா. அவள் தினமுங் களைப்பின்றித் தன் சமையல்வேலைகளைச் செய்தும், பசுக்களுக்குப் புல்முதலியன செருக்கியும் சீவிக்கிறாள். அவளதுபற்கள் ஒன்றுவது இன்னும் அசையவில்லை. முதுகுங் கூனவில்லை. அவளுக்கு 9 பிள்ளைகளும், 25 பேரப்பிள்ளைகளும், 40 பீட்டப் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். அவள்பிள்ளைகளிற்சிலர் பல்லெல்லாம் விழுந்து கிழடாய்க் காட்சியளிக்கின்றார்கள்.

## மரங்கள் நாட்டல்

மட்டக்களப்பிலுள்ள பொது மராமத்துப்பகுதியிலுள்ள கிளைச் சங்கம் இங்குள்ள தெருவோரங்களில் கனிதரும்மரங்களை நிழலுக்காகவளர்க்கும் புதியமுறைஒன்றை ஆரம்பித்து வருகிறது. தற்போது மகோவிலுள்ள தெருவோரங்களில் பலாக்கன்றுகள் நிழலுக்காக நாட்டப்பட்டுவருகின்றன. இப்பகுதி மராமத்துவேலைகளைப் பார்வையிடும் ஓவசியர் இந்தப் பலா மரங்களைப் பாதுகாப்பார். இவ்விதமே பல தெருவோரங்களில் மாங்கன்றுகளும் நாட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## தமிழ்-சிங்களத் தந்தி

கூட்டுறவுப்பகுதியைச்சேர்ந்த திரு. ஏ. ஜி. வீரசிங்கஅவர்கள் தமிழிலும் சிங்களத்திலும் தந்திச் செய்திகளை அனுப்பக்கூடிய ஒரு நூதனமுறையைக் கண்டுபிடித்திருக்கிறார். தமிழிலும் சிங்களத்திலும் தந்திச்செய்திகளையனுப்புவதுசம்பந்தமாய் அநுபவ ரீதியாய்த் தபால் அதிகாரிகளுக்குச் சிலசங்கடங்கள் ஏற்பட்டனவென்று அவர் கூறியிருக்கிறார். தமிழிலும் சிங்களத்திலும் பெருந்தொகையான அடையாளங்கள் உபயோகிக்கப்படுவதின்விளைவாகத் தபாலதிகாரிகள் சங்கடப்படுகின்றனரென்று தோன்றுகின்றது. ஆகவே திரு. வீரசிங்கஅவர்கள் "மோர்ஸ்முறை"யை அடிப்படையாகக்கொண்டு தமிழிலும் சிங்களத்திலும் தந்திச்செய்திகளை அனுப்புவதற்குரிய அடையாளங்களை 26 ஆகக் குறைத்திருக்கின்றார். ஒரே ஒலியடையாளமுறையைத் தமிழ் - சிங்களத் தந்திகளுக்கு உபயோகிக்கமுடியுமென்று அவர் சொல்லுகின்றார்.

## கிராம முன்னேற்ற சங்கம்

### ஊர்காவற்றுறை

சென்ற 2-5-51 புதன்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில் திருஇருதய வாசிகசாலையில் ஊர்காவற்றுறைக் கிராமவிதானையார் பகுதியைச்சேர்ந்தவர்களுக்கென ஓர் கிராமமுன்னேற்ற சங்கம் கூட்டப்பெற்றது. இதில் தலைமைவகித்த தீவுப்பகுதிக் காரியாதிகாரி (D.R.O. Islands) அவர்கள் இப்பகுதியில் அவசியம் ஓர் கிராம முன்னேற்றசங்கம் இருக்கவேண்டுமென்றும், அதனால்வரும் நன்மைகள் அதிகம் என்பதுபற்றியும் விரிவாகக்கூறினர். அதன்மேல் கிராம முன்னேற்றசங்க உத்தியோகஸ்தர், இச் சங்கத்தின் நோக்கங்களையும், அவைகள் செய்யும் ஆக்ககருமங்களையும் எடுத்துப் பேசினார். பின்னர் கீழ்வரும் உத்தியோகஸ்தர்கள் சபையோரால் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வண. பிலிப் பொன்னையா சுவாமியார், D. C. L.; உபதலைவர்கள்: T.A.F. இராசையா, S. வல்லிபுரம்; போஷகர்: S.M. செல்லத்தம்பு, (D.R.O.); உபபோஷகர்: S.M. நிச்சுவே, (Chairman, T. C. Kayts.); காரியதரிசி: S.A.F. துரைசிங்கம்; உபகாரியதரிசி: S. சீனஸ்; தனகாரியதரிசி: S. கிறிஸ்தோத்திரம்.

11 அங்கத்தவர்களைக்கொண்ட நிர்வாககுழுஒன்று சபையோரால் தெரியப்பட்டது. பின் போஷகரின் விருப்பத்தின்படி 'சமாதான நீதிமன்றம்' ஒன்று நிறுவப்பட்டது. இம் மன்றத்திற்கு 5 அங்கத்தவர்கள் சபையோரால் தெரியப்பட்டார்கள். ஈற்றில் தலைவர் வண. பிலிப் பொன்னையா சுவாமியவர்கள், இச்சங்கம் திறம்பட நடாத்தப்படவேண்டுமென்றும் இதில் உள்ள அங்கத்தவர்கள் இச்சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அல்லும் பகலும் உழைக்கவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டார். ஆசிரியர் T. தோமஸ் அவர்கள் இக்கூட்டத்திற்குச் சமுகமளித்த அன்பர்களுக்கெல்லாம் நன்றி கூறியதுடன் கூட்டம் இனிது கலைந்தது.

— S. சீனஸ்

## கராச்சி மகாநாடு

சுதந்திரஉலக கைத்தொழிற் சங்க மகாநாடு இம்மாசக்கடைசியில் நடைபெறவிருக்கிறது. அதற்கு இலங்கைப் பிரதிநிதிகளாக இராசாங்கமந்திரி ஸ்ரீ ஏ. ஈ. குணசிங்காவும், ஸ்ரீ ஆர். ஈ. ஜெயதிலகாவும் செல்வார்களெனத் தெரிகிறது. இம்மகாநாட்டில் இலங்கைக்குத்தேவையான அரிசி, கோதுமைமா முதலிய பொருட்களைப்பற்றிய விசேஷசம்பாஷணை நடைபெறுமாம்.

## புற்றுநோய்ச் சிகிச்சை

இலங்கையிலுள்ள ஒவ்வொருமாகாணத்திலும் புற்றுநோய்ச் சிகிச்சைநிலையங்களைத் திறக்க வைத்திய-சுகாதாரப் பகுதி திட்டமிட்டிருக்கிறது. இத்தகைய ஒருநிலையம் கண்டியில் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

## பிரதமரின் வாழ்த்து


எஜிப்தியமன்னர் பாரூக்கின் விவாகத்தைமுன்னிட்டு அவருக்கும் அவரது பட்டமகிஷிக்கும் பின்வரும் வாழ்த்துச்செய்தியை இலங்கைப் பிரதமர் அனுப்பியிருக்கின்றார். "தங்களுடைய விவாகத்தை முன்னிட்டு நானும் எனது அரசாங்கமும் இலங்கை மக்களும் ஒன்றுசேர்ந்து தங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துச் செய்திகளை அனுப்புகின்றோம்.

கீர்த்தி வாய்ந்த

கிறவுண் மார்க் ஓடுகள்

முடி அடையாளம் பதித்த ஓடுகளையே

பாவியுங்கள்!



இவ் ஓடுகளை அழைப்பித்து விற்பவர்:

மிசெஸ் இம்மனுவேல் திருச்செல்வம்

அவர்கள் மாத்திரமே.

[முன்போல் வியாபாரம் நடந்துவருகிறது.]

விலாசம்: பெரியதெரு, யாழ்ப்பாணம்.

தந்தி: திருச்செல்வம், போன் நம்பர்: 52.

## மரணசங்கதி

வதிரிவாசரும், உத்தமவேளாண்குல திலகரும், யாவராலும்நன்கறியப்பட்டவரும், இலங்கைஅரசினர் புகையிரதப்பகுதியில் 'ஹெட்காட்'டாகஇருந்துவரும் திரு. எஸ். நீக்கொலஸ், புகையிரதப்பகுதி காட் ஜே. அந்தோனிப்பிள்ளை, அச்சுவேலிவடக்கு றோ. க. பாடசாலைஆசிரியர் திரு. எஸ். ராஜு மரியாம்பிள்ளை, பூவாக்பிற்றிய கத்தோலிக்கபாடசாலை ஆசிரியர் திரு. எஸ். அமிர்தநாதர், மன்னார் நல்லாயன் ஆண்பாடசாலை ஆசிரியர் திரு. ஜே. யோசெவ், மிருசுவில் கத்தோலிக்க பாடசாலையின் ஆங்கிலஆசிரியர் திரு. ஜே. பாக்கியநாதர் இவர்களினது மாமனாரும், பருத்தித்துறைப் பட்டினசங்க ஓவசியராகிய திரு. எஸ். பற்றிக் அவர்களின்மைத்துனரும், அச்சுவேலி அர்ச். தெரேசாபாடசாலை ஆசிரியை திருமதி அக்னஸ் இராசம்மா மரியாம்பிள்ளையின் பெரியதந்தையாரும், பருத்தித்துறை-யாழ்ப்பாணப் பஸ்கம்பெனிப் பங்காளரில் ஒருவருமாகிய திரு. எஸ். ஞானமுத்து அவர்கள் காலில் ஏற்பட்ட இரணத்திற்குச் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையினால் சிறிதுநாள் வருந்தி அந்தியதேவதிரவிய அனுமானங்களை நேரத்தோடுபெற்றுத் தமது ஆன்மாவைப் படைத்தோன்கையில் 29-4-51 ஞாயிறுவாரமதியவேளையில் ஒப்படைத்தாரென்னும் துயரசெய்தியையறிந்து மிகவும் வருந்தலானோம்.

இறக்கும்போது இவருக்கு வயது 56. யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்றிருந்த திரு. எஸ். மச்சாடோவுடன்கூடி யாழ்ப்பாணம்-பருத்தித்துறைப் பஸ்வண்டிச்சேவையை முதன்முதல் ஆரம்பித்து, திரும்ப எஸ். மச்சாடோஇறக்கத் தானே அப்பஸ்வண்டிச்சேவையைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

"பஸ்கார ஞானமுத்து" அல்லது பெரிய ஞானமுத்து என்றுசொன்னால் யாழ்ப்பாணத் தமிழ்க்குழாமில் இவரைத்தெரியாதவர் இல்லையென்றே சொல்லவேண்டும்.

இவரதுமரணசங்கதியை அறிந்த கைத்தொழில் மீன்பிடிமந்திரி கௌரவ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களும், பருத்தித்துறைப்பகுதிப் பிரதிநிதி திரு. ரி. இராமலிங்கம் அவர்களும், மற்றும் பிறவூர்நண்பர்களும் தங்கள்அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்டனர்.

இவரது மையமானது அழகிய பேழையில் வைக்கப்பெற்றுப் பெருந்திரளான மக்கள்புடைசூழச் சேமக்காலைகொண்டுசெல்லப்பெற்று இவருக்கென ஆயத்தஞ்செய்யப்பெற்ற கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று. இவரையிழந்து துன்புறும் மக்கள், மருமக்கள், மைத்துனர், சகோதரர், பேரப்பிள்ளைகள், இனசனர் சிநேகிதருடன் நானும் அனுதாபப்படுகிறேன். R. I. P.

## கிறேஷிமா சமாதான நிலையம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

ரைக் கண்டுகொண்டோம். அப்படித்திரும்பவும் உலகத்தில் எவ்விடத்திலாவது நடக்கக்கூடாது சுவாம்.

கிறீஸ்தவர்களாகிய உங்களுக்கும், புத்தராகிய எங்களுக்கும் கடவுள் அருள் செய்தாலல்லாமல் சமாதானம் நிலையாது. உலகசமாதானத்திற்கு வேதஅனுசரிப்பும், செபமும் அவசியம். ஆகையால் அணுக்குண்டால் அழிந்த இந்தநகரின்மத்தியில், நித்திய செபவேண்டுதலுக்கேற்ற ஒரு ஆலயத்தை ஞாபகார்த்தமாக நிறுவவேண்டும். உங்கள் சமயத்தைப்பற்றி அதிகமறியோம்; ஆனால் நீங்கள் கிறீஸ்தவர்களைக்கொண்டு ஒரு ஆலயத்தை இங்கு நிறுவமுடியுமா?

குருமாருக்கு இதெல்லாம் புரியாத புதிராகவேயிருந்தது. இந்தப்பௌத்த பட்டினத்தில் ஒருகத்தோலிக்கஆலயமா? நூற்றுக்கணக்கான புத்தஆலயங்கள் நிறைந்தபுரி கிறேஷிமாவன்றோ? கிறீஸ்துவேதத்தை எதிர்த்துமிருந்தது அது. ஆனால் இப்போ?

"புத்தராகிய நீங்கள் அப்படிச் செய்தாலென்ன?" என்றார் கியுகோ சுவாமியார்; "கிறேஷிமா புத்தநகரமல்லவா? தலைவர், தலையைஅசைத்தார். எங்கள் செபம், அவ்வளவு வல்லபமுள்ளதல்ல. மோட்சத்தைத் தொடும் செபமேதேவை; நான் உங்கள் வேதாகமத்தை வாசித்திருக்கிறேன்; எங்களுடையவைகளிலும் பார்க்க உங்கள்செபம் திறமானது. அல்லாமலும் முழு நாளும் (முழங்கால்மடித்து) செபிக்கிற கன்னியாஸ்திரிமார் உங்களிடம் இருக்கிறார்கள். அதுதான் தேவை; வல்லபமுள்ள அதிகமானசெபம்தேவை.

(தொடரும்)

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 10 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org